Registered as a Newspaper பக்கங்கள் 06 விலை ரூபா: 5-00

நல்லூர் பிரதேச நூலகம் ... யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 05 திருவள்ளுவர் ஆண்டு 2025 பங்குனி 6 (19.3.94) சனிக்கிழமை ஓசை 29

## தியாகச்சுடர் அன்னை பூபதியின் ஆறாவது ஆண்டு நினைவு நாட்கள்

தியாகி அன்னை பூபதியின் ஆறாம் ஆண்டு நினைவு நாட்கள் இன்றுமுதல் எதிர் வரும் 19ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ளன. இந்திய - சிறிலங்கா அரசுகளின் அராஜக நடவடிக்கைகளைக் கண்டித்து மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் கோவில் முன்றலில் சாகும்வரை உண்ணாவிரதமிருந்து தன்னுயிரை அர்ப்பணித்த அன்னை பூபதிக்கு தமிழீழமெங்கும் உணர்வு பூர்வமாக அஞ்சலிகள் செலுத்தப்படுகின்றன. பொது இடங்கள், சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்தி சங்கங்கள், அரச தனியார் அலுவலகங்கள் அனைத்திலும் அலங்கரிக்கப்பட்ட பந்தல்கள் அமைக்கப்பட்டு, அன்னையின் உருவப்படங்கள் வைக்கப்பட்டு (6ஆம் பக்கம் பார்க்க)

# சபாநாயகர் முகமது நல்லெண்ண விஜயம்; ஏப்ரல் முதல் நாள் யாழ்ப்பாணம் வருகிறார்

## விசேட ஹெலியில் வர ஏற்பாடு புலிகளுடன் மூன்று நாள் பேச்சு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா பாராளுமன்றத்தின் சபாநாயகரும், ஐக்கிய தேசியக்கட்சியின் மூத்த உறுப்பினருமான அல்ஹாஜ் எம். எச். முகமது அவர்கள் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக அடுத்த மாதம் முதலாம்திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளார். சபாநாயகர் முகமதுவுடன் அவரது தனிச் செயலர் ஜனாப் யூமர் பிரினா, மனித உரிமைகள் சங்கத்தலைவர் பைசி முஸ்தபா, சபாநாயகரின் உதவியாளர் ஜனாப் ஹனிபாவும் வரவுள்ளனர். விசேட உலங்கு வானூர்தியில் யாழ் வரவுள்ள இவர்கள் மூன்று தினங்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் பேச்சு நடத்தவுள்ளனர்,

ஏப்ரல் மாதம் முதலாம் திகதி யாழ்ப்பாணம் வரும் சபாநாயகரும் ஏனையோரும் மூன்றாம் திகதிவரை இங்கு தங்கியிருப்பார்கள் என அறிய முடிகின்றது.

சபாநாயகரும் ஏனையோரும் பலாலியில் இருந்து சிறிலங்கா அரசாங்கத்திற்குச் சொந்தமான உலங்குவானூர்தியில் யாழ் நகரம் வந்தடைவார்கள் எனவும் தெரியவருகின்றது.

மேற்குறிப்பிட்டவாறு மூன்று தினங்கள் தங்கியிருக்கும் சபாநாயகர் இக்காலப்பகுதியில் விடுதலைப் புலிகளுடன் தொடர்ச்சியாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபடு



## மறு பிறப்பிலாவது புலிகளை அழிப்பேன்

### டி. பி. விஜேதுங்கா கூறுகிறார்

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற்துறையினர் அறிவித்துள்ளனர்.

## ஐ. நா. பிரதிநிதி யாழ் வருகை

(கொழும்பு)

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் ஆலய அதிகாரி ஒருவர் மிக விரைவில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவிருக்கிறார்.

மேற்படி ஸ்தாபனத்தின் மூலமாக யாழ் மாவட்டத்தில் மேற்கொள்வதற்குச் சாத்தியமான சிறு செயற்திட்டங்கள் குறித்து ஆராய்வதற்காகவும், குடாநாட்டின் தற்போதைய சூழ்நிலைகள் குறித்து ஆராய்வதற்காகவுமே இவரது விஜயம் பயன்படும் என்று தெரியவருகிறது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் ஆலயத்தின் வவுனியா வதி

## லெப். கேணல் ரவி வீரச்சாவு



# புலிகளை அழிப்பேன்

## டி. பி. விஜேதுங்கா கூறுகிறார்

(கொழும்பு)

புலிகள் என்னைக் கொன்றாலும் நான் மீண்டும் பிறந்து புலிகளை ஒழிப்பேன் என சிறிலங்கா ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா தெரிவித்தார். பத்தேகமவில் நடைபெற்ற தென்மாகாணசபை தேர்தல் பிரசாரக்கூட்டம் ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ரஞ்சன் விஜயரத்ன, பிரேமதாசா ஆகியோர் போன்று தான் கொல்லப்பட்டாலும் அடுத்த பிறப்பில் மீண்டும் சிறிலங்காவில் பிறந்து புலிகளை அழிப்பதற்கு வரம் கிட்ட வேண்டும் என தான் விரும்புவதாக குறிப்பிட்டார்.

மேற்குறிப்பிட்டவாறு மூன்று தினங்கள் தங்கியிருக்கும் சபாநாயகர் இக்காலப்பகுதியில் விடுதலைப் புலிகளுடன் தொடர்ச்சியாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவர் என்றும் தெரியவருகின்றது.

இப் பேச்சுக்களின் போது இனப்பிரச்சினைக்கு ஓர் சமாதான தீர்வு காண்பதற்கான சூழ்நிலையை உருவாக்குவது குறித்தும், முஸ்லிம் மக்களின் பிரச்சினை குறித்தும் பேசப்படும் எனவும் நம்பகரமாகத் தெரியவருகின்றது.



கள் குறித்து ஆராய்வதற்காகவுமே இவரது விஜயம் பயன்படும் என்று தெரியவருகிறது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் ஆலயத்தின் வவுனியா வதிவிடப் பிரதிநிதியே இவ்வாறு யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்ய உள்ளார் என்று தெரியவருகிறது.



வன்னி மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட எதிர்பாராத வெடி விபத்தொன்றில் வன்னி மாவட்ட சிறப்புத் தளபதி லெப். கேணல் ரவி வீரச்சாவடைந்தார்.

# உலகக் கெரில்லாத் தலைவர்களில் பிரபாகரன் மிகச் சிறந்தவர்

(பம்பாய்)

பல வியக்கத்தக்க இராணுவ சாமர்த்தியங்களைக் கொண்ட ஒரு கெரில்லாப் படையாக விடுதலைப் புலிகள் இயக்கம் பரிணமித்துள்ளது. அதன் தலைவர் பிரபாகரன் இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் கெரில்லாப் படைத் தலைவர்களில் மிகச் சிறந்தவர் என்பதை மிக எளிதில் கூறிவிட முடியும் என இந்திய அமைதிப் படையில் பணியாற்றிய மேஜர் ஜெனரல் அசோக்மேத்தா 'சண்டே' சஞ்சிகைக்கு எழுதிய கட்டுரையில் தெரிவித்தார்.

அவர் அக்கட்டுரையில் மேலும்;

திரு. வேலுப்பிள்ளை பிரபாகரனால் வழிநடத்தப்படும் விடுதலைப் புலிகள் இயக்கமே இன்றைய மிகப் பெரிய கெரில்லாப்படை.

சிறிலங்கா பாதுகாப்புப் படையினை அடிபணிய வைத்த அளவும் இந்திய அமைதிப்படையின் பலத்திற்கு ஈடாக மட்டுமல்ல அதற்கும் மேலாகவும் செயல்களம் ஆடிய புலிகள் மாசே

(6ஆம் பக்கம் பார்க்க)

## கோமாரி வந்தடைந்தது

(வடமராட்சி)

கொழும்பில் இருந்து புறப்பட்ட "எம். வி. கோமாரி' கப்பல் நேற்றுக்காலை 6.00 மணியளவில் 3 ஆயிரத்து155 மெற்றிக் தொன் அத்தியாவசியப் பொருள்களுடன் பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்து சேர்ந்தது.

இக் கப்பலில் அரிசி 2000 மெற்றிக்தொன், பருப்பு 200 மெற்றிக் தொன், சீனி 950 மெற்றிக் தொன் என்பனவும் யாழ் போதனா வைத்தியசாலைக்கு மருந்து வகைகள் கல்வித் திணைக்களத்திற்கு இலவச பாடப் புத்தகங்கள் வெண்கட்டிகள், காகிதாதிகள் ஆகியனவும் எடுத்து வரப்பட்டன.

யாழ் செயலக திட்டப் பணிப்பாளர் திரு செ. பத்மநாதன், நிர்வாக உத்தியோகத்தர் திரு. விக்னேஸ்வரமூர்த்தி ஆகியோர் கப்பலுக்குச் சென்று பொருள்களை பாரமேற்றதையடுத்து பொருள்கள் இறக்கும் பணிகள் உடனேயே ஆரம்பமாகின.

(6ஆம் பக்கம் பார்க்க)

# எதிர்பாராத வெடிவிபத்தில் இரு போராளிகள் வீரச்சாவு

(முல்லைத்தீவு)

வன்னி மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட எதிர்பாராத வெடிவிபத்தொன்றில் வன்னி மாவட்ட சிறப்புத் தளபதி உட்பட இரு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த லெப்டினன்ட் கேணல் ரவி (குமாரவேல் இரவீந்திரகுமார்- படித்த வாலிபர் திட்டம் அதிசய விநாயகர் கோவில் விசுவமடு முல்லைத்தீவு), கப்டன் சேந்தன் (சிவபாதசுந்தரம் விக்கினேஸ்வரன் - சுபாஸ் ஹொட்டேல் யோகபுரம், மல்லாவி, கிளிநொச்சி) ஆகிய போராளிகள் இருவருக்கும் விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.



கப்டன் சேந்தன்

# பூநகரியில் 3 நிமிட தாக்குதல் 3 படையினர் பலி; ஆயுதங்கள் மீட்பு

(பூநகரி)

பூநகரி முகாமிலிருந்து தடைகளை அகற்றும் வேலையில் ஈடுபட்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் நடத்திய திடீர் தாக்குதலில் மூன்றுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

நேற்றுக்காலை 7: 35மணியளவில் தடைகளை அகற்றிய பூநகரி இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலானது மூன்று நிமிடங்கள் மட்டுமே நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலையடுத்து பூநகரி முகாமிலிருந்து இராணுவத்தினர் தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டவண்ணமிருந்தனர்.

இவ் வெற்றிகரத் தாக்குதலை அடுத்து விடுதலைப்புலிகளால் இராணுவத்தினரின் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

இதன்போது கைப்பற்றப்பட்ட ஆயுதவிபரங்கள் வருமாறு!

- ரி 56-2ரகதுப்பாக்கி-01
- மகசீன் -01
- நடுத்தர ரவைகள் -30

# புறக்கோட்டைப் பகுதியில் 45 தமிழ் இளைஞர் கைது

(கொழும்பு)

கொழும்பு புறக்கோட்டையில் உள்ள வர்த்தக மையமொன்றிலிருந்து 45 தமிழ் இளைஞர்கள் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

'பீப்பிள்ஸ் பார்க்' எனும் வர்த்தக மையமொன்றை நேற்றுமுன்தினம் சுற்றிவளைத்த பொலிசார் இவர்களைக் கைதுசெய்தனர்.

இப்பகுதி சுற்றிவளைக்கப்பட்டபோது சிலர் தப்பி ஓடிவிட்டதாகவும், கைதானவர்கள் விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் எனவும் பொலிசார் தெரிவித்தனர்.

இவர்களில் அநேகர் கடைச் சிப்பந்திகள் எனத் தெரியவருகிறது.

# மலேரியா தடுப்பு வாரம்; பிரதேசரீதியாக நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

மலேரியா தடுப்பு வாரகாலத்தில் பிரதேச ரீதியாக கருத்தரங்குகளும், சிரமதானங்களும் நடாத்தப்பட வேண்டும் என இதன் குழுவினர் அறிவித்துள்ளனர்.

இந்த நோயைப் பற்றிய விழிப்புணர்வை ஊட்டும் வகையிலான கருத்தரங்குகளை சகல பிரதேசங்களிலும் நடாத்துவதோடு, பிரதேசத்திற்கு பிரதேசம் சிரம

(6ஆம் பக்கம் பார்க்க)


## உரிமைக்காய் எரிந்தவள்!

உண்ணாமல் உறங்காமல் — தமிழர்
உரிமைக்காய் நோன்பிருந்து
பெண்ணுக்கு ஈழத்தில்
பெருமைகள் சேர்ப்பதற்காய்
கண்ணுக்கு முன்னாலே
கருகி எரிந்த பூபதித்தாயை
எண்ணாமல் இருக்க முடியாது
ஈழத்தமிழர் எங்களால்.

அன்னை பூபதித்தாய் நினைவில்

யாழ். வணிகர் கழகம்

தமிழீழம். (இ(8871)

## வரி விளம்பரம்

### சேவல் குஞ்சுகள் விற்பனைக்கு

கோல்டன் கொமட் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு; ''மல்லிகாபதி'', சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (7784)

### பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்கு

கைலைன்பிறவுண் (Hy-Line Brown) பேட்டுக் குஞ்சுகள் 2 கிழமை வளர்ச்சியடைந்த பேட்டுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு; ''மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (7785)

### என்றும் எமக்கு மரணமில்லை

தாய்நாடு காக்கும் போரில் (1941-1945) பங்குபற்றி உயிர்நீத்த சோவியத் கவிஞர்களின் கவிதைகள் விற்பனையாகிறது, யாழ்- வசந்தம், தமிழ்த்தாய் புத்தகசாலை. (7745)

### தவறிவிட்டது

யாழ்ப்பாணத்திற்கும் மாம்பழச் சந்திக்கும் இடையில் மோட்டார் வாகன உறுதிப் பத்திரமும் (தூ2-5627), குடும்ப அட்டையும் (ரட்ணசிங்கம் கனகரத்ணம், சாவகச்சேரி) தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (7797)

பொ. கைலாசபதியின் சிந்தனைகள்

யாழ்ப்பாணம் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் உப அதிபராகப் பணியாற்றிய காலஞ்சென்ற பொ. கைலாசபதி அவர்களின் சிந்தனைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் நூல் வடிவாக்கிச் சில பிரதிகளை வெளிக்கொணர்ந்துள்ளது.

கைலாசபதியவர்கள் அவ்வப்போது மொழி, சமயம் பற்றிக் கூறிவந்த சிந்தனைகளை, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்கள் 32 அப்பியாசக் கொப்பிகளில் தமது கை

## B.M.C. லொறி உதிரிப்பாகங்கள்

BMC ஐந்து தொன் லொறியின் புதிய, பாவித்த உதிரிப்பாகங்களும், 7X50X20 அளவு மீளமைக்கப்பட்ட ரயர்களும் விற்பனைக்குண்டு. ''மில்க்வைற்'' (லி - 8865)

## இறைச்சிக் கோழி

இறைச்சிக் கோழிகள் எந்நேரமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளவும். உங்கள் கோழிகளை சந்தைப்படுத்தவும் சுவையருவி கோழிப்பண்ணை மின் நிலைய வீதி, யாழ்ப்பாணம். (லி - 8799)

# இன்றைய நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்-பிறவுண் வீதியில் இயங்கிவரும் புங்குடுதீவு மகா வித்தியாலயத்தின் வருடாந்த 'இல்ல மெய்வல்லுநர் போட்டி' இன்று பிற்பகல் இரண்டு மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் வித்தியாலய அதிபர் திரு. ந. தர்மபாலன் தலைமையில் நடைபெறும். (22)

ஃ ஃ

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை அருள்மிகு மணலியம்பதி ஸ்ரீ அம்மன் ஐயனார் ஆலய வருடாந்தக் குளிர்த்தித் திருவிழா இன்று காலை விசேட அபிஷேகம், பூசை ஆராதனையுடன் இடம்பெறவுள்ளது. (24)

ஃ ஃ

(பருத்தித்துறை)

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவு, சிறுவர் பாடசாலை ஆசிரியர் சங்கமும் கரவெட்டி சிறுவர் ஆசிரியர் பயிற்சி துணைநிலையமும் இணைந்து நடாத்தும் சிறுவர் விளையாட்டு விழா இன்று நெல்லியடி மத்தியமகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறுகின்றது. இச்சிறுவர் விளையாட்டு விழாவில் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவு பாலர் பாடசாலைகள் பங்குபற்றுகின்றன. (25)

ஃ ஃ

(குருநகர்)

யாழ். கொழும்புத்துறை புனித சூசையப்பர் வித்தியாலயத்தில் இன்று பாடசாலைத் தினக் கொண்டாட்டங்கள் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் திரு. பி. பெனடிக்ற் தலைமையில் நிகழும் வைபவங்களில் பழைய மாணவர்களும் கலந்து சிறப்பிப்பர். (21)

ஃ ஃ

(வடமராட்சி)

தொண்டமனாறு கம்பர்மலை அ. த. க. பாடசாலை இல்ல விளையாட்டுப்போட்டி இன்று பாடசாலை அதிபர் திரு. ஆனந்தீஸ்வரன் தலைமையில் பிற்பகல் 2-00 மணிக்கு நடைபெறவுள்ளது.

தென்மராட்சிப் பகுதியிலுள்ள இலக்கிய ஆர்வலர்களுக்கான கலந்துரையாடல் இன்று மாலை 3.00 மணியளவில் அறவழி பயிலகத்தில் நடைபெறவுள்ளது. அறவழிப் போராட்டக் குழுவினால் நடத்தப்படவுள்ள இச்சந்திப்பில் இலக்கிய கர்த்தாக்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஃ ஃ

(பருத்தித்துறை)

புலோலி புனித சூசையப்பர் ஆலய வருடாந்த திருவிழா கடந்த 10ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கப்பட்டு தினமும் நடைபெற்று வருகின்றது. இன்று காலை நடைபெறும் திருப்பலி ஒப்புக்கொடுக்கும் விழாவுடன் இவ் ஆலயத்திருவிழா பூர்த்தியடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (25)

ஃ ஃ

யாழ் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் இரண்டு மணியளவில் இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் அதிபர் ந. தர்மபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஃ ஃ

(தொல்புரம்)

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வல்லுநர்போட்டிகள் இன்று பிற்பகல் 2,00 மணியளவில் கல்லூரி மைதானத்தில் கல்லூரியின் அதிபர் திரு. கா. சந்திரபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் சங்கானை கல்விக்கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. ப. விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், சங்கானை வட்ட - துறைப் பொறுப்பாளர் திரு. ந. மதி அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (41)

ஃ ஃ

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாண கிளைத் தொண்டர்களுக்கான கருத்தரங்கு இன்று முற்பகல் பத்து மணியளவில் சங்க தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

# நினைவு கூருகின்றோம்...

## 1994-03-19

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய -

**பேரின்பம்** (சுந்தரலிங்கம் பேரின்பராசா - தம்பிலுவில் - அம்பாறை)

1988ஆம் ஆண்டு அம்பாறை - விநாயகபுர பகுதியில் இந்தியப் படையினர் மற்றும் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**ரமணி** (வேலுப்பிள்ளை ஜீவராசா - தம்பிலுவில் - அம்பாறை)

இதே சுற்றிவளைப்பின்போது தனது கைக்குண்டை வயிற்றில் வெடிக்க வைத்து வீரச்சாவெய்திய -

**நிதி** (செல்வநாயகம் கருணாநிதி - தம்பிலுவில் - அம்பாறை)

1989ஆம் ஆண்டு பருத்தித்துறை, புலோலி, புற்றளைப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

**லெப் பவான் ராஜன்** (சரவணானந்தன் பவானந்தன் - வி. எம். வீதி - பருத்தித்துறை)

**றொசான்** (நடேசன் சிவதாசன் - பல்லாவத்தை, புலோலி தெற்கு - பருத்தித்துறை)

**ஹரி** (கனகவேற்பிள்ளை ஹரிகரன் - ஞானத்தோட்டம், புலோலி தெற்கு - பருத்தித்துறை)

1990ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் மூளைக் காய்ச்சல் நோயின் காரணமாக எமைப் பிரிந்த -

**லோறன்ஸ்** (இரத்தினம் இராசலிங்கம் - 37-ம் கிராமம், பக்கியெல்ல - மட்டு)

1991ஆம் ஆண்டு மன்னார் - சிலாவத்துறைப் பகுதியில் சிறிலங்காப் படைமுகாம் தகர்ப்பு யுத்தத்தின் போது கரும்புலித் தாக்குதலை மேற்கொண்டு வீரச்சாவெய்திய -

**கரும்புலி மேஜர் டாம்போ** (காசிப்பிள்ளை தயாபரன் - நாச்சிக்குடா சந்தி - மன்னார்)

மற்றும் இதே சமரில் வீரச்சாவெய்திய -

**கப்டன் ஜெரோம்** (வைத்திலிங்கம் அந்தோனிதாஸ் - மருத்துவமனை வீதி - மன்னார்)

**கப்டன் கஜன்** (செபஸ்தியாம்பிள்ளை விஜயராசா - வண்ணாங்குளம், அடம்பன் - மன்னார்)

**லெப். குட்டி** (கணபதி தங்கராசா - ஐயங்கேணி, ஏறாவூர் - மட்டு)

**ஜின்னா** (கா. கோபாலபிள்ளை - களுவாஞ்சிக்குடி - மட்டு)

**சுந்தர்** (செபமாலை மரியதபேந்திரன் - பாடசாலை வீதி, 4-ம் வட்டாரம் - திருமலை)

**கனகன்** (கந்தசாமி ரஞ்சித்குமார் - நேரியகுளம் - வவுனியா)

**ஜெயசக்தி** (யூடிற் ராதிகா குணரத்தினம் - செல்வபுரம் - முல்லைத்தீவு)

**பஸ்ரியன்** (அழகையா தேவராசன் - தாமரைக்குளம், அடம்பன் - மன்னார்)

**இளங்கோ** (சாமித்தம்பி கண்ணன் 5-ம் கட்டை, எருக்கலம்பிட்டி - மன்னார்)

**2-ம் லெப். நிலாரவி** (சவரி அன்ரன் ஜெயசீலன் - முதலைக்குத்தி, உயிலங்குளம் - மன்னார்)

**பூபால்** (ஞானேஸ் வடிவேல் - வாழ்க்கைப்பட்டான் கண்டல், நானாட்டான் - மன்னார்)

**மேஜர் செட்டி-பிரதாப்** (கந்தசாமி செல்வக்குமார் - பொன்னாலை, சுழிபுரம் - யாழ்)

# யாழ். பல்கலைக்கழகத்தில் விரிவுரை பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர்களும் தமது விரிவுரைகளை நேற்றுப் பகிஷ்கரித்தனர்.

பல்கலைக்கழக மாணவர்களின் மகாபொல புலமைப் பரிசிலை இரட்டிப்பாக்குவதில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அசமந்தப்போக்கைக் கண்டித்தே பகிஷ்கரிப்பை நேற்று நடாத்தினர்.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் பணத்துடன் மேலதிகமாக 1000 ரூபாவை வழங்குமாறு கோரிக்கையை ஏற்கனவே விடுத்த போதும் இது விடயத்தில் எவ்வித நடவடிக்கையையும் எடுக்காத பட்சத்திலேயே அனைத்துப் பல்கலைக்கழக முழுச் சமுதாயமும் மானியங்கள் ஆணைக்குழுவிற்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது. (5)

## கண்டெடுப்பு

கந்தையா - கௌரி 63788056 V புகையிரத நிலைய வீதி சுன்னாகம், பரமேஸ்வரி - நடராசா 446400142 V நீர்வேலி வலிகாமம் கிழக்கு, கந்தையா - ஏகாம்பரம் 2624603355 V சுன்னாகம் கிழக்கு, இசைசுமி-சந்தையா 428470214V 496, கைதடி, கனகம்மா - ஏகாம்பரம் 345952063X கோப்பாய் தெற்கு, ஜெயராணி - தியாகராசா 545042517X சங்கானை கிழக்கு சங்கானை, கேதாரீஸ்வரி - வைத்தீஸ்வரன் 727180702 V சுன்னாகம் கிழக்கு, சுந்தரமூர்த்தி - ஸ்ரீமுருகதாஸ் 582441995 V உரும்பிராய் கிழக்கு, கே. தவநாயகி - 625611741 V 202, கண்டி றோட் யாழ்ப்பாணம், கந்தசாமி கருணாகரன் அராலி மேற்கு, எஸ் சிவலிங்கம் 344, அன்புவெளிபுரம், திருகோணமலை, (2 அடையாள அட்டைகள்) என்பவர்களுடைய அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அதற்குரியவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## இலக்கத்தகடு விநியோகம்

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குட்பட்ட மக்களுக்கு துவிச்சக்கரவண்டிக்கான இலக்கத் தகடுகள் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகிறது.

அலுவலக நேரங்களில் இத் துவிச்சக்கரவண்டி இலக்கத்தகடுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ் மாநகர சபை பதில் ஆணையாளர் திரு. நா. நவரத்தினராசா தெரிவித்துள்ளார். (24)

## பிரிவுபசாரம் நடைபெற்றது

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலராகவிருந்து கோப்பாய் பிரதேச செயலாளராக இடமாற்றம் செய்யப்பட்ட பிரதேச செயலாளர் திரு. க. கேதீஸ்வரனுக்கு வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கம் பிரதேச செயலர் திரு. க. கனகரட்ணம் தலைமையில் பிரிவுபசார விழா கொண்- நடாத்தியது. (25)


## டாக்டர்கள் தேவை

MBBS, RMO, AMP தரத்திலுள்ள டாக்டர்கள் தேவை. யாழ்குடாநாட்டிற்குள்ளும், வெளியிலும் (வன்னிப் பிராந்தியம்) இயங்கும் பொது ஸ்தாபனத்தில் கடமையாற்றக் கூடிய டாக்டர்கள் விண்ணப்பிக்கலாம் விண்ணப்பங்கள் யாவும் 1. 4. 1994இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். சம்பளம் நேரில் பேசித் தீர்த்துக் கொள்ளப்படும்.

நிர்வாகி,

வில்லியம் ஹாவே தனியார் மருத்துவமனை

இல. 17, கண்டி வீதி,

யாழ்ப்பாணம்

(7795)

கள் 32 அப்பியாசக் கொப்பிகளில் தமது கையெழுத்திலேயே எழுதி வைத்திருந்தார்.

கைலாசபதியவர்களின் சிந்தனைகளை அழிந்து போக விடாது போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்று யாழ்ப்பாணத்துக் கல்விமான்கள் பலர் எமக்குச் செய்த வேண்டுகோளுக்கிணங்கவே இந்நூற் பிரதிகள் வெளிக்கொணரப்பட்டுள்ளன; கைலாசபதியின் சிந்தனைகளை, பல்கலைக்கழகத்தின் சார்பில் பேராசிரியர் சு. சுசீந்திரராசாவும், திரு ஆ. சபாரத்தினமும் பதிப்பித்துள்ளனர்.

இந்நூற் பிரதிகள் விற்பனைக்கென வெளியிடப்படவில்லை; ஆதலால் அவை பல்கலைக்கழக நூல் நிலையத்தில் மட்டும் இருக்கும்; கைலாசபதியின் சிந்தனைகளில் ஆர்வம் உள்ளவர்கள், ஆய்வாளர்கள், சாதனையாளர்கள் நூல் நிலையத் தலைவருடன் தொடர்புகொண்டு தக்கவாறு நூலைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

பண்டிதமணியின் சிந்தனைகளுக்கும் ஆய்வுக்கும் ஊற்றாக, ஊன்றுகோலாக விளங்கியவர் பேர், கைலாசபதிஆவார். கைலாசபதியவர்களைச் சிந்தனைச் செல்வர், தத்துவ விசாரத்தில் மூழ்கியவர், தெய்வப்பிறவி, மனிதத் தெய்வம், மகாத்மா, ஞானி, நெற்றிக்கண்ணர் புண்ணிய ஆத்மா, முனி என்றெல்லாம் பண்டிதமணி தமது எழுத்துக்களில் ஆங்காங்கு போற்றி எழுதியுள்ளமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது; சிந்தனைக்குரியது.

பேராசிரியர் அ. துரைராசா
துணைவேந்தர்
யாழ். பல்கலைக்கழகம்.
(இ-8864)

மையில் பிற்பகல் 2-00 மணிக்கு நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக கரவெட்டி கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. இராசா கலந்துகொள்கிறார். (வோ)

ஃ ஃ

(சுன்னாகம்)

யாழ். இந்துசமயப் பேரவையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று காலை 9-30 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் திரு. ஆத்மஜோதி முத்தையா தலைமையில் நடைபெறவுள்ளது. ஆசியுரையை நல்லை ஆதீனகர்த்தாவும், வாழ்த்துரைகளை மகாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள், பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோரும், சிறப்புரைகளை கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர், கலாநிதி நா. சுப்பிரமணியன் ஆகியோரும் நிகழ்த்துவர். (11)

அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

ஃ ஃ

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் 1.30 மணியளவில் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஃ ஃ

புங்குடுதீவு சிறீ கணேச மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா வண்ணார்பண்ணை மேற்கில் செயற்படும் கல்லூரியின் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இன்று காலை ஒன்பது மணியளவில் இவ் வைபவம் நடைபெறும்.

ஃ ஃ

நேசநாயனார் குருபூசையும் சேந்தனார் நினைவுப் பேருரையும் இன்று காலை ஒன்பது மணியளவில் மெய்கண்ட தேவர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

# ஏல விற்பனை

## வெற்று உரப்பைகள்

### கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்

எமது திணைக்களத்தில் பாவனைக்குதவாத வெற்று உரப்பைகள் ஒரு தொகை 1994.03.28ஆம் திகதி காலை 10-00 மணிக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட உள்ளது. எனவே அவற்றினை ஏலத்தில் பெற்றுக்கொள்ள விரும்புவோர் அன்றைய தினம் காலை 10-00 மணிக்கு கல்வித் திணைக்கள களஞ்சியக் கிளையில் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படுகிறீர்கள். மேற்படி உரப்பைகளைப் பார்வையிட விரும்புவோர் அன்றைய தினம் காலை 9-00 மணிக்குக் களஞ்சியக் கிளையில் பார்வையிடலாம். ஏலத்தில் வெற்றி கொள்வோர் உடனடியாகப் பணத்தினைக் கணக்காளரிடம் செலுத்துவதுடன் அன்றைய தினமே அவற்றினை பொறுப்பேற்று அப்புறப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

யாழ். கல்விப் பணிப்பாளர்

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
17-03-1994
(இ-8868)

மேஜர் செட்டி-பிரதாப் (கந்தசாமி செல்வக்குமார் - பொன்னாலை, சுழிபுரம் - யாழ்)
லெப். குட்டி (இராசநாயகம் ஜஸ்ரின் - 41/21, மதிதியூஸ் வீதி - யாழ்)
லெப், வாணி (சிவராணி செல்லத்துரை - கச்சாய் வீதி - சாவகச்சேரி)
2-ம் லெப். ரஜீ (நவநீதநாதன் சுரேஸ்குமார் - தேவாலய வீதி, சங்கானை - யாழ்)
நளினி (புவனேஸ்வரி சின்னத்தம்பி - மீசாலை வடக்கு - சாவகச்சேரி)
காவேரி (நிரஞ்சினி வைரமுத்து - பொன்மணி நிலையம், அல்வாய் வடக்கு - பருத்தித்துறை)

1992ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினர் 3-வது நாளாக மேற்கொண்ட ''ஒப்பரேசன் சுஜபார'' நடவடிக்கையின்போது நிகழ்ந்த கடுஞ் சமரில் வீரச்சாவெய்திய -

2-ம் லெப். அறத்திருவன்-ஆனந்தன் (சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை - 2-ம் குறிச்சி அம்பாறை)
2-ம் லெப். திருச்செல்வம் (நாகமணி பிரேமானந்தம் - பாண்டிருப்பு, கல்முனை - அம்பாறை)
எல்லாளன் (நாதன் நாதசிறி - அக்கரைப்பற்று - அம்பாறை)
லெப், ஒள்ளியன்-ஆனந்தகுமார் (சீனித்தம்பி கனகரெட்ணம் - பழுகாமம் - மட்டு)
லெப். புலித்தேவன்-அமுதன் (செல்வம் செல்வேந்தன் - பன்குடாவெளி - மட்டு)
2-ம் லெப். யோகேந்திரன் (பொன்னம்பலம் ஆனந்தன் - துறைநீலாவணை - மட்டு)
2-ம் லெப். அசோகன் (சுப்பையா யோகராசா - மாங்காடு - மட்டு)
லெப். புகழ்வேந்தன்/சளன் (நாகராசா சிவனேசன் - மணற்சேனை, மூதூர் - திருமலை)
2-ம் லெப். வாமன் (சிவலிங்கம் லிங்கன் - மாவடிச்சேனை, மூதூர் - திருமலை)
2-ம் லெப். இளங்கோ (சித்திரவேல் அசோக்குமார் - கட்டைபறிச்சான், மூதூர் - திருமலை)
இளங்குமணன் (சுப்பிரமணியம் மகேந்திரன் - தம்பலகாமம் - திருமலை)
2-ம் லெப். ரஞ்சித்குமார் (குருசாமி தவராசா - சொர்ணபுரி, அடம்பன் - மன்னார்)
2-ம் லெப். சந்திரன் (இராசு ஆறுமுகம் - நெளுக்குளம் - வவுனியா)
தில்லையழகன்-கிட்டிணன் (கறுப்பையா சிவகுரு - பெரியதம்பனை - வவுனியா)

யாழ்ப்பாணம்
(7795)

லெப். இராகவன் (ஐயாத்துரை சிவகுமாரலிங்கம் - ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு)
2-ம் லெப். செல்லத்துரை-விக்னா (மகாலிங்கம் பாஸ்கர் - புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு)
தமிழ்மாறன் (அந்தோனிப்பிள்ளை லோறன்ஸ் - தண்ணீரூற்று - முல்லைத்தீவு)
மேஜர் ஜெயகரன்-சாள்ஸ் (கந்தையா ஜங்கரன் - கரைச்சி புளியம்பொக்கணை - பரந்தன்)
கப்டன் சிவராஜ் (குமாரலிங்கம் மோகனதாஸ் - இத்தாவில் - பளை)
2-ம் லெப். ஜெயா (மாணிக்கம் தியாகராசா - உருத்திரபுரம் - கிளிநொச்சி)
கப்டன் பாவலன்-உருத்திரா (சற்குணநாதன் ஜீவரத்தினம் - மயிலிட்டி - காங்கேசன்துறை)
இளம்வழுதி (அந்தோனிமுத்து டொமினிக் - வீடமைப்புத்திட்டம், நாவற்குழி - யாழ்)

முல்லைத்தீவில் எமது காவலரண் ஒன்றின் மீது சிறிலங்கா விமானப்படையினர் நடாத்திய விமானக் குண்டுவீச்சில் வீரச்சாவெய்திய -

2-ம் லெப். ஆதவன்-ஜேம்ஸ் (சுப்பிரமணியம் பிரபாகரன் - முள்ளிவாய்க்கால் மேற்கு - முல்லைத்தீவு)

1993ஆம் ஆண்டு அம்பாறை - கஞ்சிகுடிச்சாறுப் பகுதியிற் சிறிலங்கா விசேட அதிரடிப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

பிரேம்குமார்-குமாரவேல் (இராமக்குட்டி அருளம்பலம் - கோளாவில் - அம்பாறை)
விஸ்வம் (நாகமணி சந்திரசேகரம் - முனைக்காடு, கொக்கட்டிச்சோலை - மட்டு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

⊛ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

தமிழீழ விடுதலைப் புலிகள்.

(இ-8858)

தென்னிந்திய திருச்சபை யாழ். ஆதீனம்

## கீர்த்தனை இயற்றும் போட்டி

1. கவிஞர்களிடமிருந்து பின்வரும் விடயங்களில் கீர்த்தனைகள் எதிர்பார்க்கப்படுகின்றன:

(1) சுவிசேட பிரபல்யம்

(2) பாவ அறிக்கை

(3) தூய ஆவி

(4) திருச்சபை

2. ஒருவர் எத்தனை கீர்த்தனைகளையும் அனுப்பலாம். ஒவ்வொன்றும் தனித்தனி தாளில் எழுதப்பட வேண்டும்.

3. கீர்த்தனைகள், இயக்குனர் சங்கீத சபை, தென்னிந்திய சபை காரியாலயம், வட்டுக்கோட்டை என்ற விலாசத்திற்கு 31-05-94 செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் அனுப்பப்படல் வேண்டும்.

கீர்த்தனை சொந்தப் படைப்பாகவும் முன்னர் பிரசுரிக்கப்படாததாகவும் இருக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | ரூபா | 2,500.00 |
| இரண்டாம் பரிசு | ரூபா | 1,500.00 |
| மூன்றாம் பரிசு | ரூபா | 1,000.00 |

இயக்குனர்,
சங்கீதசபை,
தெ. இ. யா. ஆதீனம்
வட்டுக்கோட்டை.

17-03-94

(ஒ-8856)


# சிலர் வெளியேறிப் போவதால் காங்கிரஸ் பிளவுபட்டுவிடாது

## — எஸ். தொண்டமான்

(கொழும்பு)

காங்கிரசிலிருந்து சிலர் வெளியேறினால், காங்கிரஸ் பிளவுபடும் என நினைப்பவர்களின் கனவு பலிக்காது. காங்கிரசின் நடவடிக்கைகள் இப்போது முன்னரைவிட மேலும் சக்தி பெற்றுள்ளது. அத்துடன் காங்கிரசுக்கு பெரும் மதிப்பும் ஏற்பட்டுள்ளது இவ்வாறு இ. தொ. கா. தலைவரும் அமைச்சருமான எஸ். தொண்டமான் தெரிவித்தார்.

கொட்டகலவிலுள்ள நுவரெலிய பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் நுவரெலிய பிரதேசசபை, அம்பகமுவ பிரதேசசபை, கொத்மலை பிரதேசசபை, வலப்பனை பிரதேசசபை என்பவற்றின் இ. தொ. கா. உறுப்பினர்களின் மத்தியில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், இன்று காங்கிரசின் நாளாந்த வேலைகள் சுமுகமாகவும், விரைவாகவும் நடந்துகொண்டுதான் இருக்கின்றன.

அண்மையில் ஒரு சாகித்ய விழாவுக்கு நான் சென்றிருந்தேன். அங்கு புத்தக கண்காட்சி ஒன்று நடந்தது. அதைப் பார்வையிட்டேன். அங்கு தமிழ் அகராதி வைக்கப்பட்டிருந்தது. இதில் எல்லாத் தமிழ்ச் சொற்களும், அர்த்தங்களும் இருக்கிறது என்றார்கள். அதில் சாகித்யம் என்ற சொல்லும் அர்த்தமும் இருக்கிறதா எனக் கேட்டேன். புரட்டிப் பார்த்துவிட்டு இல்லை என்றார்கள் எனவே சாகித்யம் என்ற சொல்லே தமிழ் இல்லை. இந்தப் பெயரில் வேறு மொழியில் உள்ள ஒரு பெயரில் ஏன் விழா கொண்டாட வேண்டும். அதே பெயரில் நாமும் விழா கொண்டாட வேண்டும் என்பதில்லை. நமது தேவைகளுக்கேற்பவே நாம் விழாக்களை நடத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## கழிவுநீர் பெருகுவதால் நகரப்பகுதியில் துர்நாற்றம்

(மானிப்பாய்)

யாழ்நகரின் மத்திய பகுதிகளில் கால்வாய்களின் ஊடாக செல்லும் அசுத்த நீர் வீதிகளில் வழிந்து ஓடுவதால் அப்பகுதி துர்நாற்றம் வீசும் இடமாக காணப்படுகின்றது. யாழ் போதனா வைத்திய சாலையில் இருந்து வெளியேறும் கழிவு நீர் போவதற்காக அமைக்கப்பட்ட சுரங்கக் கால்வாய்களின் 'துப்புரவு செய்யும் வாய்ப்பகுதி' யினூடாகவே இக்கழிவுநீர் வெளியேற்றப்படுகின்றது.

இக்கழிவு நீர் வெளியேறுகை பற்றி பலதடவைகள் இதற்குப் பொறுப்பாக உள்ள அதிகாரிகளுக்கு தெரிவித்த போதும் அவர்கள் இன்னும் அக்கறை கொண்டு தேவையான நடவடிக்கையை எடுக்கவில்லை என அப்பகுதியில் வியாபாரம் செய்யும் ஒரு பொதுமகன் கவலையுடன் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் பாடசாலைக்கு செல்லும் சிறுவர்கள் அக்கழிவு நீரினை காலால் சிந்தி விளையாடுகின்றார்கள். இதனால் பல தொற்று நோய்கள் ஏற்படவழிவகுக்கின்றது. குறைந்தது ஒரு கிழமைக்கு ஒரு தடவையாவது இக்கழிவு நீர் வெளியேறுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (07)


மானிப்பாய் கோ. ப. ப. நோ. கூ. சங்கம்

## கூறுவிலை கோரல்

மேற்படி சங்கத்தில் அமைந்துள்ள லொறிக்கொட்டகைக்கு சங்கத்திலுள்ள கைப்புக்களைப் பாவித்து கதவு செய்வதற்கான கூறுவிலை 30-3-94 திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விபரங்களை சங்க காரியாலய நாட்களில் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். கூறுவிலைகள் அரக்கு முத்திரையிடப்பட்டு பொதுமுகாமையாளர், மானிப்பாய் பல நோ. கூ. சங்கம்'' என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்

மானி. கோ. ப. ப. நோ. கூ. சங்கம்

(சி-8861)



## விற்பனைக்கு

கடற்தொழிலுக்குத் தேவையான களங்கட்டிக் கம்பு, பாய்மரம், தண்டுமரம் மற்றும் பூட்டுக் கம்புகள், வேலிக்குப் பாவிக்கக் கூடிய கம்பிச் சட்டைகள், கொக்கைத்தடிக்கான தடிகள், மண்வெட்டி கோடரிப் பிடிக்குப் பாவிக்கக் கூடிய தடிகள் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:

1. அரச மரக்கூட்டுத்தாபன விற்பனைக் காரியாலயம், கல்வியங்காடு
2. கடல்வள அபிவிருத்திப்பகுதி, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், தாவடி.

(ஒ-8867)


## வன்னிப் பிரதேச பரீட்சை நிலைய எண்கள்

(யாழ்ப்பாணம்)

பரீட்சைத் திணைக்களத்தினால் சகல மாவட்டங்களினதும் க. பொ. த (உ/தர) பரீட்சை நகர எண்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

இதன்படி யாழ் மாவட்ட பரீட்சை நகர எண்களின் மாற்றம் நீங்கள் அறிந்ததே. மேலும் கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கான மேற்படி பரீட்சை நகர எண்களின் மாற்ற விபரம் வருமாறு:

கிளிநொச்சி - 109, பனை- 110, மன்னார் - 111, முருங்கன் - 112, மடு - 113, முல்லைத்தீவு - 114, முள்ளியவளை - 115, புதுக்குடியிருப்பு- 116, வவுனியா - 117, ஓமந்தை- 118 என்பனவையாகும். (பா)

## அலுவலகம் திறப்பு

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உட்கட்டுமானப்பகுதியினர் தமது வேலைத் திட்டங்களை முல்லைத்தீவு மாவட்டத்தில் விரிவுபடுத்தும் நோக்கமாக ஒட்டுசுட்டான் வட்டத்திலுள்ள கருவேலன் கண்டல் கிராமிய உற்பத்திக்குழுப் பகுதியில் புதிய அலுவலகமொன்றை கடந்த மாத இறுதியில் திறந்து வைத்துள்ளனர்.

இத் திறப்பு விழா நிகழ்வில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பணிப்பாளர் தேசியக் கொடியை ஏற்றிவைக்க முல்லை மாவட்ட பொதுநிர்வாக தொடர்பகப் பொறுப்பாளர் சம்பிரதாயபூர்வமாக அலுவலக


தேசியம்
(திங்கள் இதழ்)

## வெளியீட்டு விழா

இடம்: நாவலர் கலாசார மண்டபம் யாழ்ப்பாணம்.

காலம்: 20 - 03 - 1994 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3. 00 மணி

### நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| மங்கல விளக்கேற்றல்: | திரு. ப. மூர்த்தி அவர்கள் (பொறுப்பாளர்திருமலைத் தொடர்பகம்) |
| அமைதி வணக்கம்: | |
| வரவேற்புரை: | திரு. சி. கருணாகரன் அவர்கள் |
| தலைமையுரை: | திரு புதுவை இரத்தினதுரை அவர்கள் (பொறுப்பாளர் விடுதலைப் |


## பட்டதாரிகளைப் பதிதல் அரசு ஆரம்பித்துள்ளது

(கொழும்பு)

தொழிலற்றிருக்கும் பட்டதாரிகளை அரசாங்கம் பதிவு செய்யத் தொடங்கியுள்ளது. அரசாங்க தனியார் நிறுவனங்களில் இவர்களுக்கு பொருத்தமான தொழில் வாய்ப்பை பெற்றுக் கொடுப்பதே ... களுக்கென சகல பிரதேச செயலகங்களிலும் விசேட பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொழில் வாய்ப்புகள் சம்பந்தமான தகவல்கள் இந்த விசேட பிரிவுகளால் இவர்களுக்கு


மட்டுவில் தெற்குவளர்மதி ச. ச. நிலையம்

## "பாராட்டு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்"

ஈழத்தின் மூத்த வைத்தியராகக் கௌரவிக்கப்பட்டு அகில இலங்கை சித்த வைத்திய சங்கத்தினரால்

"வைத்திய இரத்தினம்"

என்னும் விருதினை வழங்கி பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்ட

வைத்திய இரத்தினம் பேதுறு பிலிப்ஸ்

வைத்தியஇரத்தினம் வ. சின்னப்பு

ஆகியோரது வைத்திய சேவையினைக் கௌரவித்தும் பாராட்டியும் மட்டுவில் தெற்கு வளர்மதி சன சமூக நிலையத்தினரால் நடாத்தப்படும் பாராட்டு விழாவும், வளர்மதி கல்வி நிலையத்தின் பரிசளிப்பு விழாவும்

காலம்:- 20-03-199. ஞாயிறு இரவு 7.00 மணி

இடம்:- வளர்மதி நிலைய கலை அரங்கு

தலைமை:- திரு. மா. சுப்பையா (நிலையத் தலைவர்)

முதன்மை விருந்தினர்

அவர்கள்
(பொறுப்பாளர் விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகம், தமிழீழம்)

வெளியீட்டுரை: திரு. இளையவன் அவர்கள் (அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் யாழ். மாவட்டம்)

வெளியீடு:

வழங்குபவர்: திரு. சி. கரிகாலன் அவர்கள் (அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் தமிழீழம்)

பெறுபவர்: திரு. இளம்பரிதி அவர்கள் (அரசியல் துறைப் பொறுப்பாளர் யாழ். மாவட்டம்)

மதிப்பீட்டுரைகள்: பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள்
திருமதி கோகிலா மகேந்திரன் அவர்கள்
திரு. செம்பியன் செல்வன் அவர்கள்

பதிலுரை: திரு திருமலை யோகேந்திரம் அவர்கள் (ஆசிரியர் தேசியம்)

நன்றியுரை: திரு. தி. சபாரத்தினம் அவர்கள் (தலைவர் சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கம்)


எமது ஆதரவில் வளரப்போகும் "தேசியம்" இதழுக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

வழங்குபவர்கள்:

சித்த வைத்தியக் கூட்டுறவுச்சங்கம்.

அனைவரும் வருகவே! ஆதரவு தருகவே!
உங்கள் வாழ்த்துக்களுடன் தேசியம் வளர்கவே!

இவ் அழைப்பை அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வண்ணம்
சித்த வைத்தியக் கூட்டுறவுச்சங்கம்.

(கி-8863)


...ருத்தமான தொழில் வாய்ப்பை பெற்றுக் கொடுப்பதே இதன் நோக்கமென செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை பல்கலைக் கழகப் பட்டம் பெறாதவர் ... வாய்ப்புகள் சம்பந்தமான தகவல்கள் இந்த விசேட பிரிவுகளால் இவர்களுக்கு வழங்கப்படும் என அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்களுக்கு

# தெரிவாகும் ஆசிரியருக்கு சம்பளமற்ற லீவுடன் வசதி

(கொழும்பு)

பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படும் ஆசிரியர்களுக்குசம்பளமற்ற லீவையும் ஏனைய வசதிகளையும் கல்வி அமைச்சு செய்துகொடுக்கவுள்ளது.

இதேவேளை பல்கலைக்கழகத்திற்கு தெரிவுசெய்யப்படும் ஏனைய மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து பயிலும் காலம் வரை அவர்களுக்கு தற்காலிகமாக ஆசிரியர் நியமனங்கள் வழங்குவதற்கான ஒரு திட்டமும் வகுக்கப் பட்டுள்ளது. பல்கலைக்கழக விவகார அமைச்சும் கல்வி அமைச்சும் இணைந்து இத் திட்டத்தை வகுத்துள்ளன.

ஆங்கிலம், விஞ்ஞானம் அல்லது கணிதத்தில் க.பொ.த உயர்தர தகைமையை பெற்றவர்களே இந்த நியமனத்திற்கு உரித்தாவார்கள் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன. பல்கலைக்கழகத்திற்கு படிப்பை தொடங்கும் வரை தத்தமது வசிப்பிடத்திற்கு அருகில் உள்ள பாடசாலைகளில் கல்வி புகட்டுவார்கள் எனவும் இவர்களுக்கு மாதம் ஆயிரத்து ஐந்நூறு ரூபா வேதனம் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கப்பல் தள ஒதுக்கீட்டிலும் கறுப்பு சந்தைவியாபாரம்

(கொழும்பு)

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு பொருட்களை ஏற்றி வரும் கப்பல்களில் தளஇட ஒதுக்கீட்டில் பல குளறுபடிகள் இருப்பதுடன், சில வர்த்தகர்களின் ஆளுமையும் காணப்படுவதால் யாழ். குடாநாட்டுக்கு பொருள்களை எடுத்துவரும் தனியார் கூடுதலான கட்டணம் செலுத்தியே கப்பலில் தளஇட ஒதுக்கீட்டைப் பெற வேண்டியிருப்பதாகக் கூறப்படுகிறது.

கப்பலில் பொருள்களை ஏற்றுவதற்காக சில வர்த்தகர்கள் பொருட்கள் ஏற்றும் தளத்தின் ஒதுக்கீட்டைக் குத்தகையாகப் பெற்றுக்கொள்வதாகவும், இதன் பின்னர் யாழ். குடாநாட்டிற்கு பொருள்களை ஏற்றி அனுப்பும் வர்த்தகர்களுக்கு இவ் ஒதுக்கீட்டை கறுப்பு சந்தை விலைகளில் வழங்குவதாகவும் கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு கறுப்பு சந்தையில் இடங்களைப் பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் யாழ் அரசாங்க திணைக்கள அதிகாரிகள் சிலர் முக்கிய பங்கு வகிப்பதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

கறுப்பு சந்தையில் இட ஒதுக்கீட்டைப் பெறாத வர்த்தகர்கள் தமது பொருள்களை என்றுமே கப்பலில் அனுப்ப முடியாதவாறு வடபகுதி வரும் கப்பல்களில் தள ஒதுக்கீடு செய்யப்படுவதாகவும் தெரியவருகின்றது. (நி-க)

...ட பொதுநிர்வாக தொடர்பகப் பொறுப்பாளர் சம்பிரதாயபூர்வமாக அலுவலகத்தை திறந்து வைத்தார். இப் புதிய அலுவலகம்திறக்கப்பட்டுள்ளமையினால் முல்லைத்தீவு மாவட்டத்தில் உட்கட்டுமானப்பகுதியின் வேலைத்திட்டங்கள் முனைப்புப்பெறும் எனக் கருதப்படுகின்றன.

## வீதி விபத்தில் ஒருவர் காயம்

வீதியால் சென்ற வாகனம் ஒன்று விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமுற்றார்

நேற்றுமுன்தினம்பிற்பகல்2 15 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து கிளாலிக்குச்சேவையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வாகனமே இவ்வாறு விபத்துக்குள்ளானது மேற்படி தட்டிவான் யாழ்ப்பாணத்திலிருந்து கிளாலியை நோக்கி பயணிகளுடன் வந்துகொண்டிருந்தவேளை சாவகச்சேரி பழைய பொலிஸ் நிலையத்திற்கு அண்மையில் பிரதான வீதியில் விபத்துக்குள்ளானது

## சிவப்பு இல்லம் முதலிடம் பெற்றது

கொற்றாவத்தை அமெரிக்கன்மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை வருடாந்த இல்லங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டியில் சிவப்பு இல்லம் 243 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றது. பச்சை இல்லம்237 புள்ளிகளைப் பெற்று இரண்டாம்இடத்தையும் மஞ்சள் இல்லம் மூன்றாவதுஇடத்தையும் பெற்றுக்கொண்டன. இவ்விளையாட்டுப் போட்டி பாடசாலை அதிபர் திரு. ச. மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. பருத்தித்துறை கோட்டக் கல்விஉதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆ. இராசேந்திரம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கினார். உபஅதிபர் திரு. ச. அமிர்தலிங்கம் நன்றியுரை நிகழ்த்தினார். (25)

(நிலையத் தலைவர்)

### முதன்மை விருந்தினர்

திருமிகு. பு. சுந்தரம்பிள்ளை அவர்கள்
(பிரதேச செயலரும் உ. அ. அ. தென்மராட்சி)

### சிறப்பு விருந்தினர்

திரு. க. எழிலன்
(பொறுப்பாளர் த. ஈ வி. பு மாணவர் அமைப்பு சாவகச்சேரி கோட்டம்)

### கௌரவ விருந்தினர்கள்

திரு. மு பாலசுப்பிரமணியம்
(அதிபர் மகாவித்தியாலயம் மட்டுவில்)
திரு. க. துரைரத்தினம்
(அதிபர் மட்டுவில் அ மி. த. க பாடசாலை)
திரு. பூங்குன்றன்
(சிற்றூர் பிரதேச பொறுப்பாளர் த. ஈ. வி. பு)
திரு. வே துரைசிங்கம்
(கிராம உத்தியோகஸ்தர் மட்டுவில் நுணாவில்)
திரு. ச. சிதம்பரநாதன்
(தனியார் கல்விநிலைய இணைப்பாளர் தென்மராட்சி கோட்டம்)

### நிகழ்வுகள்

1. மங்கல விளக்கேற்றல்
2. அமைதி வணக்கம்
3. வரவேற்புரை:- திரு. த. அப்புத்துரை (நிலைய உபதலைவர்)
4. பாராட்டுரைகள் (விருந்தினர்கள்)
5. விழா நாயகர்களை பொன்னாடை போர்த்திக் கௌரவித்தல்
6. பதிலுரை விழா நாயகர்கள்
7. வளர்மதி கல்வி நிலைய மாணவர்களுக்கான (1993ஆம் ஆண்டிற்கான) பரிசளிப்பு (முதன்மை விருந்தினர்)
8. கலை நிகழ்வுகள்:-
   நடனம்; நிலைய மாணவிகள்
   நாடகம்: பெரிய மாவடி சித்திவிநாயகர் கலை மன்றம் வழங்கும் "தர்ம உபதேசம்" (குறியீட்டு நாடகம்)
9. நன்றியுரை: திரு. க. வாமதேவன் (நிலைய செயலாளர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

மட்டுவில் தெற்கு. வளர்மதி க.ச.நிலைய நிர்வாகிகள்


விளம்பர அன்பளிப்பு:

"ஆனந்தா பல் பொருள் அங்காடி"

இல. 8 சந்தை உட்புறம் சாவகச்சேரி
உரிமையாளர் நா. வடிவேலு
தென்மராட்சியில் மொத்த சில்லறை விற்பனையில் தனித்துவமான ஸ்தாபனம்
ஆனந்தா பல் பொருள் அங்காடி (7791)

# தென்மாகாண தேர்தலுக்கு 14,000 ஊழியர் கடமையில்

(கொழும்பு)

தென்மாகாண சபைக்கு 53 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான தேர்தலை நடாத்த, 14,000 த்திற்கு மேற்பட்ட அரசாங்க ஊழியர்கள் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படுவர் எனத் தேர்தல் ஆணையாளர் சந்திரானந்தடி சில்வா தெரிவித்துள்ளார்.

தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பாகக் கிடைக்கும் முறைப்பாடுகள் தென்மாகாண பொலிஸ் மாஅதிபரின் கவனத்திற்கு கொண்டு வரப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தென் மாகாணத்தில் 1255 வாக்குச் சாவடிகள் அமைந்துள்ளன. இத் தேர்தலின் போது பாதுகாப்புக்கென 2466 மேலதிக பொலிஸார் அங்கு அனுப்பப்படவுள்ளனர்.

இவர்கள் மார்ச் 22 ஆம் திகதி முதல் கடமையில் ஈடுபடுத்தப்படுவர். தேர்தல் கடமைக் கென 110 வாகனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

# சண்டிலிப்பாயில் போசாக்குத் திட்டம் அமுல்

(தொல்புரம்)

வலிகாமம் தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் போசாக்குத் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

மேற்படி திட்டம் சம்பந்தமாக அண்மையில் மேற்படி பிரதேச செயலக மண்டபத்தில் வலி. தென்மேற்கு பிரதேச செயலர் திரு. துரைத்திலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தின் போது "போசாக்குத் திட்டக் குழு" அமைக்கப்பட்டு அக்குழுவின் தலைவராக பிரதேச செயலர் அவர்களே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இப் போசாக்குக் குழுவினால் ஆரம்ப கட்டமாக இடம்பெயர்ந்தோர் முகாம்கள் பின்தங்கிய கிராமங்கள் போன்றவற்றில் போசாக்கு சம்பந்தமான கணிப்பீடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மானிப்பாய் சச்சி முகாம், மானிப்பாய் கல்லூரி முகாம் என்இரண்டு, நவாலி சிலன் முகாம் போன்ற இடம்பெயர்ந்தோர் முகாம்களிலும், ஆனைக்கோட்டை முள்ளிக் கிராமத்திலும் உள்ள சுமார் 487 மக்களுக்கு எடைக் கணிப்பு நடவடிக்கைகள் முதல் கட்டமாக மேற்கொள்ளப்பட்டன. இவர்களில் 1வயது முதல் 12 வயது வரையான சிறுவர்கள் 387 பேர்களும், பாலூட்டும் தாய்மார்கள 76 பேரும், கர்ப்பிணிப்பெண்கள் 24 பேரும் அடங்குவர்.

மேலும் அடுத்த கட்டமாக மேற்குறிப்பிட்ட தொகையினருக்கு சுகாதாரப் பகுதியினரின் வைத்திய பரிசோதனையின் பின்னர் பூச்சி மருந்து வழங்கப்பட்டு அதன் பின்பு போசாக்கு குறைந்த அனைவருக்கும் போசாக்கு உணவு வழங்கப்படவுள்ளது. இத்திட்டம் சண்டிலிப்பாய் பிரதேச மட்டத்தில் மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளது.

(41)

# பாடசாலை முன்னேற்றத்திற்கு பெற்றோர் ஒத்துழைப்பு அவசியம்

## சங்கானை பிரதேச செயலர்

"இப் பாடசாலை பௌதிக வளம் குறைந்த விளையாட்டு மைதானம் இல்லாத ஒரு கிராமப்புறப் பாடசாலையாக இருந்தபோதும் பெற்றோர், பழைய மாணவர், பொது ஸ்தாபனங்களின் ஒத்துழைப்பினால் ஒரு சில கல்லூரிகளை விட மிகச் சிறந்த முறையில் விளையாட்டுப் போட்டியை நடாத்தியிருப்பது பாராட்டுக்குரியது. பாடசாலைகளின் வளர்ச்சி, முன்னேற்றத்திற்கு பெற்றோரின் ஒத்துழைப்பு மிகமிக அவசியமாகும். இன்றைய இப் போட்டிக்கு பெற்றோர், பழைய மாணவர்கள், பொது ஸ்தாபனங்கள் ஏராளமான பரிசுப் பொருட்கள், கிண்ணங்கள், கேடயங்களை வழங்கியிருப்பது இவர்களின் ஒத்துழைப்பை எடுத்துக் காட்டுகிறது."

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அதிபர் சைவப்புலவர் திரு. நா. க. தங்கரத்தினம் அவர்களது தலைமையில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய சங்கானைப் பிரதேச செயலர் மேலதிக அரசாங்க அதிபர் திரு. கா. சந்திரராஜா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது, "இங்கு இடம்பெற்ற மாணவிகளின் உடற்பயிற்சிக் கண்காட்சியானது மிகச் சிறப்பாகவும் ஒழுங்காகவும் அமைந்திருந்தது. இசையோடு சேர்த்து இந்த உடற்பயிற்சிக் கண்காட்சியை பயிற்றுவித்த ஆசிரியைகளை நான் மனமாரப் பாராட்டுகின்றேன்." என்றார்.

சங்கானைப் பிரதேச உப அலுவலகப் பொறுப்பதிகாரி திரு. பொன். சண்முகானந்தசிவம், சட்டவைப் பொறுப்பாளர் திரு. மதி, பிரபல சமூகத்தொண்டர் பழைய மாணவர் திரு. இ. கோணேஸ்வரன் ஆகியோர் பரிசில்களை வழங்கினர்.

விளையாட்டுத்துறை நிர்வாகச் செயலாளர் ஆசிரியை செல்வி சிவகௌரி கார்த்திகேசு நன்றியுரை நிகழ்த்தினார்.

# அனுமதி அட்டைகள் தபாலில் சேர்ப்பு

அரச, மாகாண சேவையின் பொது எழுதுனர் சேவையின் வகுப்பு 2 அ பிரிவிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைதிறமைகாண் பரீட்சை கிராமசேவகர் தரம் உ ரீவுக்கான பரீட்சை கூட்டுறவு சங்க பரிசோதகர்களுக்கான ஆட்சேர்ப்பு பரீட்சை என்பன இன்று 19ஆம் திகதி நடைபெறவுள்ளது.

# இரட்டைச் சூட்டடுப்பு பாவனை மாதிரி அளவீடு

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சக்திப் பகுதியினரினால் அறிமுகப்படுத்தப்பட்டு இப்போது யாழ் குடாநாட்டில் 9751 குடும்பங்களினாலும் பெருநிலப்பரப்பில் 200 குடும்பங்களினாலும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற இரட்டைச் சூட்டடுப்புப் பற்றிய மக்களது கருத்துக்களை அறியும் நோக்கில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன புள்ளிவிபரக் கிளையினர் ஓர் மாதிரி அளவீட்டினைச் செய்ய உத்தேசித்துள்ளனர். இதன்படி யாழ் குடாநாட்டில் உள்ள இரட்டைச் சூட்டடுப்பை பாவிக்கும் குடும்பங்களில் 160 குடும்பங்களையும் இரட்டைச் சூட்டடுப்பை பாவிக்காத 330 குடும்பங்களையும் சேர்த்து 490 குடும்பங்கள் ஏழுமாற்று முறையில் தெரிவு செய்யப்பட்டு இவ் ஆய்வில் உட்படுத்தப்பட உள்ளனர்.

இவ் ஆய்வின்மூலம் தற்போதைய பாவனையாளர்களின் திருப்தியினை அளவிடவும், தேவைப்படுமிடத்து மேலும் மாற்றங்களை கொண்டு வரவும் சூட்டடுப்புப் பாவனை செய்யாதவர்கள் ஏன் அதனை பாவிப்பதில்லை என்ற காரணத்தை அறிந்து அதனை நிவர்த்தி செய்வதற்கான வழி முறைகளைக் கையாளவும் தற்போதைய சூட்டடுப்புத் தேவையை அறிந்து கொள்ளவும். சூட்டடுப்புத் [illegible]

க.பொ.த (உ-த) பரீட்சைக்கு

# 2-ம்தரம் விண்ணப்பிப்போர்

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



### வீரவேங்கை காவேரி
(நிரஞ்சனி வைரமுத்து)

| தாயக மண்ணில் | தமிழீழ விடிவிற்காய் |
|---|---|
| 19 . 06 . 1972 | 19 . 03 . 1991 |

செஞ்சத்தம் எக்கணமும் அதிரவைக்கும் செவிப்பறையை
சென்றிடுவாள் துணிவோடு கல்விதனைக் கற்றறிய
இருகண்களாய்த் திகழும் மண்ணுடனே கல்வியையும்
இரக்கமின்றி சீர்குலைக்கும் பாதகரை அழித்தொழிக்க
நிலையாக முன்நின்று போராடும் அணியுடனே
நிரஞ்சனியும் தானிணைந்து காவேரியாய்த் திகழ்ந்து வந்தாள்

## ஆண்டொன்று போயினதோ!



தாயின் மடியில் முத்தாக
26-08-1974

தமிழீழ மண்ணில் வித்தாக
19-03-1993

### 2-ம் லெப். மகாலிங்கம் - மயூரன்
(சிவராஜா திலகராஜா)

பிள்ளையைப் பெற்று விட்டோம் - நமக்கு
பின்னுக்கு உதவி செய்வகய் என்று
பள்ளி செல்ல வைத்தோம் - பட்டம்
பெற்று வீடு வருவாயென்று - நீயோ
படிப்பு வேண்டாம் இப்போ - தமிழீழம்
வரட்டும் எப்போ
அப்போது படிப்போம் என்று
படையில் சேர்ந்து விட்டாய்
எதிரியைத் தொலைக்கச் சென்றாய்
விழுப்புண்கள் உடலில் கொண்டாய்
எதிரியின் பாசறை காணச் சென்றாய்
எலும்புதானும் காணவில்லை என்செய்வோம்

நின் பிரிவாற்றாமை தாங்காத
குடும்பத்தினர், உற்றார், உறவினர்

டச்சு வீதி,
சாவகச்சேரி.

(7778)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
31-01-1931
(கோப்பாய்)

உதிர்வு:
19-03-1992
(புலோலி)

### அமரர் கபிரியேல் பிரகாசம்
(சென். ஜேம்ஸ் வீதி, பலாலி தெற்கு வயாவிளான்)

எங்கள் அன்பின் தெய்வமே பாசத்தின் உறைவிடமே எல்லோருக்கும் முன்மாதிரியும் இனியவராகவும் எங்கள் இதயங்களில் என்றும் அணையாத தீபமாக சுடர் விட்டு திடீரென அணைந்து விட்ட ஒளி விளக்கே; எங்களை விட்டு பிரிந்து விட்டீர். ஆனால் உணர்வால் உயிராக எம் உள்ளங்களில் நீர் என்றும் [illegible]

நிலையாக முன்நின்று போராடும் அணியுடனே
நிரஞ்சனியும் தானிணைந்து காவேரியாய்த் திகழ்ந்து
வந்தாள்
லொவத்துறைச் சமரில் குண்டிற்கு இலக்காகி
சாவினிலே சரித்திரமும் படைத்தின்று மூன்றாண்டு

-குடும்பத்தினர்.

பொன்மணி நிலையம்
காவேரி வீதி,
அல்வாய் வடக்கு.

(7758)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர் ஓரேற்றர்
**சி. சுப்பிரமணியம்**
B. A. (LONDON) அவர்கள்
(முன்னாள் அதிபர் யா/சுன்னாகம்
ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

20-03-1994 ஞாயிறு காலை 9.30 மணிக்கு யா/சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெறவிருக்கும் எமது மதிப்பிற்குரிய முன்னாள் அதிபர் அமரர் சி. சுப்பிரமணியம் B A. அவர்களின் 31ஆம் நாள் நினைவுப் பிரார்த்தனையிலும், கூட்டத்திலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

வை. இராசையா
தலைவர்

சேது விபுலானந்தா
கௌரவ செயலாளர்

பழைய மாணவர் சங்கம்,
யா/சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
கந்தரோடை, சுன்னாகம்.

(இ-8868)

## 2-ம்தரம் விண்ணப்பிப்போர் பணம் செலுத்த வேண்டும்

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு பாடசாலையில் இருந்து இரண்டாவது முறையாகத் தோற்றும் பரீட்சார்த்தி பரீட்சைக் கட்டணம் செலுத்தியே தோற்ற முடியும் என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

முதல்முறையாக பாடசாலையில் இருந்து தோற்றும் பாடசாலைப் பரீட்சார்த்தி பரீட்சைக் கட்டணம் செலுத்தாமலே மேற்படி பரீட்சைக்கு தோற்றமுடியும் என்பது நீங்கள் அறிந்ததே.

ஆனால் பாடசாலையில் இருந்து இரண்டாம் முறை தோற்றும் பாடசாலைப் பரீட்சார்த்தி பரீட்சைக் கட்டணம் செலுத்தியே தோற்ற முடியும் என யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

## பெண்களை தாக்கியவருக்கு நீதிமன்றம் தண்டனை

(தென்மராட்சி)

பெண்களைத் தாக்கி காயம் விளைவித்த நபர் ஒருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றம் தண்டனை விதித்துள்ளது. அல்லிப்பளைப் பகுதியைச் சேர்ந்த நபரொருவர் அதே இடத்தைச் சேர்ந்த இரண்டு பெண்களை தடியால் அடித்துக் காயம் விளைவித்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இச்சம்பவத்தில் கடுங்காயங்களுக்குள்ளான பெண்ணுக்கு இழப்பீடாக 3000 ரூபா வழங்கும்படியும், ஒரு மாத கட்டாய சிறைத்தண்டனையும், பணம் கட்டத்தவறின் மேலதிகமாக 120 நாட்கள் சிறை தண்டனையும் விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது. )86)

## திடீர் மழையினால் குடியிருப்பில் அவலம்

(யாழ்ப்பாணம்)

கடந்த சில மாத வரட்சிக்குப் பின்னர் கடந்த புதன் பெய்த மழை அரியாலை சாம்சன் குடியிருப்பில் வசிக்கும் மக்களுக்கு பெரும் பாதகமாகவே அமைந்துள்ளது. மழை பெய்யத் தொடங்கியவுடன் கொட்டகைகள் அனைத்தும் ஈரமாகி கால் வைக்கவே முடியாத அளவிற்குச் சேறாகிவிட்டன. சமைப்பதற்கும், படுத்துறங்குவதற்கும் இடமின்றி மக்கள் அல்லற்பட்டனர். "எப்போ மழை வருமோ?" என வானத்தைப் பார்த்து பயந்து கொண்டிருந்த மக்களுக்கு இந்த மழையினால் பெரும் சங்கடம் ஏற்பட்டுள்ளது. கொட்டகையில் இருந்து சிறு சிறு வாய்க்கால்கள் வெட்டப்பட்டு அவையூடாகவே வெள்ளம் வடிய விடப்படுகின்றது. குடியிருப்பில் உள்ள குடும்பங்களுக்குத் தனித்தனியே குடிசைகள் அமைத்து வழங்குமாறு கேட்டு சலித்துபோய் விட்டதாகவும், தற்போது மழை பெய்கையில் "கொட்டகைக்குள் இருப்பதை விட வெளியே நின்றால் நனைவது குறைவாயிருக்கும்" என்றும் குடியிருப்பு வாசிகள் கிலேசனம் தெரிவித்தனர்.

(22)

டடுப்புத் தேவையை அறிந்து கொள்ளவும். சூட்டடுப்புத் தேவைக்கேற்ப சூட்டடுப்பு உற்பத்தியில் அதிகரிப்பைக் கொண்டு வரவும் என பல காரணங்களுக்காக இவ் ஆய்வு மேற் கொள்ளப்படவிருக்கிறது.

தற்போது இவ் ஆய்வு தொடர்பான படிவங்கள் அறிவுறுத்தல்கள் தயாரித்தல் ஏழுமாற்று முறையில் இவ் வாய்வுக்குஉட்படுத்தும் குடும்பங்களைத் தெரிவு செய்தல், போன்ற ஆரம்ப வேலைகளை மேற்கொண்டு வரும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன புள்ளி விபரக் கிளையினர் இவ்வாய்வின் வெற்றிக்கு சம்பந்தப்பட்ட சகலரினதும் ஒத்துழைப்பையும் நாடி நிற்கின்றனர்.

### இலவச வைத்திய பரிசோதனை

சாவகச்சேரி சத்திய சாயி சேவா நிலையம் யாழ் மாவட்டத்தில் உள்ள மற்றைய சத்திய சாயி சேவா நிலையங்களுடன் இணைந்து இம்மாத இறுதியிலும், சித்திரை மாதத்தில் வரும் ஞாயிற்றுக் கிழமைகளிலும் தென்மராட்சியில் உள்ள விடத்தற்பளை பாலாவி, கெற்பேலி, கச்சாய் ஆகிய கிராமங்களில் உள்ள பொதுமக்களுக்கு இலவச வைத்திய பரிசோதனையை நடாத்தவுள்ளனர்.

கடும் நோயாளர்களாகக் காணப்படுபவர்கள் யாழ் போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்களால் அக் கிராமங்களில் பரிசோதிக்கப்படவுள்ளனர். மேலதிக விபரங்களுக்கு மேற்குறிப்பிட்ட கிராமங்களின் கிராமசேவை உத்தியோகத்தர்கள் அப்பகுதி மருத்துவ மாதர்கள், அல்லது சாவகச்சேரி சத்தியசாயி சேவா நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு இவ் வேலைத்திட்டத்திற்குப் பொறுப்பான வைத்திய கலாநிதி திரு. எஸ். கருணானந்தம் அவர்கள் கேட்டுள்ளார். (மு)

விளக்கே; எங்களை விட்டு பிரிந்துவிட்டீர். ஆனால் உணர்வால் உயிராக எம் உள்ளங்களில் நீர் என்றும் வாழ்கின்றீர். இறைவனிடம் நீர்இளைப்பாற என்றும் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் ஆன்மசாந்திக்காக இன்று 19.3.1994 சனிக்கிழமை காலை 7-00 மணிக்கு கோப்பாய் புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் அத்திருப்பலியில் கலந்து கொண்டு இவரின் ஆன்மசாந்திக்காக பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள், தாய், சகோதரர்கள்,
பெறாமக்கள், மருமக்கள்,
மைத்துனர், உறவினர்கள்.

க.அருளப்பு,
இராஜ வீதி,
கோப்பாய் வடக்கு.

(7756)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
1970 . 12 . 22

தாயக மண்ணில்
1992 . 03 . 19

**கப்டன் பாவலன் (உருத்திரா)**
சற்குணநாதன் ஜீவரத்தினம்
(வீரமாணிக்க தேவன்துறை மயிலிட்டி)

இவருடன் வீரச்சாவடைந்த அனைத்து போராளிகளுக்கும் எமது அஞ்சலியை செலுத்துகின்றோம்.

வழக்கம்பிராய்,
சுழிபுரம்.

குடும்பத்தினர்.

(7770)

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு

உடலின் மற்ற உறுப்புகள் உரையாடுபவனுக்கு உதவுகின்றன. ஆனால் கரங்கள் தாமே உரையாடுகின்றன.

— குவின்டிலியன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 19-03-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05

## அடிக்காதே; அவர்களைக் கொல்!

தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவானேன். நேரடியாகவே தொட்டுவிட்டால் என்ன? என்பது போல் இருக்கின்றது, எதிர்க்கட்சிகளும், பௌத்த அமைப்புக்களும் வடக்கு - கிழக்கு மாகாணங்களை பிரித்து விடுவது தொடர்பாக அண்மையில் தெரிவித்துள்ள கருத்துக்கள்.

''தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ள மாகாணங்களைப் பிரிப்பதற்கு சர்வசன வாக்கெடுப்பு தேவையில்லை, ஜனாதிபதியின் விசேட அதிகாரங்களே போதுமானவை என்பதே எதிர்க்கட்சிகள் அரசாங்கத்திற்கு வழங்கியுள்ள புதிய ஆலோசனையாகும். அதாவது, சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தி வடக்கு-கிழக்கு பிரிவினையை விசப்பரீட்சைக்கு உள்ளாக்கவோ, அன்றி அரசாங்கத்திற்குப் பொருட்செலவோ ஏற்படுத்தத்தேவையில்லை. ஜனாதிபதியின் விசேட அதிகாரங்களைக் கொண்டு வடக்கு - கிழக்கை பிரித்து விடுவது சுலபமானது என்பதே ஆலோசனையில் அடங்கியுள்ள அம்சங்கள் ஆகும்.

இதற்கு வாய்ப்பாக ஒரு சட்ட விளக்கத்தையும் கொடுக்க அவர்கள் தவறவில்லை. அவசர காலச் சட்டத்தின்கீழ் இணைக்கப்பட்டதினால் அதனையே காரணம் காட்டி மாகாணங்களை பிரித்து விடுவதினால் சட்டப் பிரச்சினை ஏற்பட வாய்ப்பு எதுவும் இல்லை என்பதே அவர்களின் நிலைப்பாடாகும்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கு குறுக்கு வழியைக் காண்பிக்கும் இவ் ஆலோசனையை வழங்கியவர்களில் பிரதான எதிர்க்கட்சியான சுதந்திரக்கட்சியின் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் பௌத்த - சிங்கள பேரினவாதத்திற்கு நேரடியாக அரசியல்தலைமை தாங்க முற்படும் தினேஷ் குணவர்த்தனாவும், மற்றும் பௌத்த - சிங்கள அடிப்படைவாத அமைப்புக்களின் பிரதிநிதிகளான காமினி ஜெயசூரியா, டாக்டர் குணதாச [illegible]

# தமிழீழ மேன் முறையீட்டு நீதிமன்று

தமிழீழ விடுதலைப் புலிகளின் நீதி நிர்வாகப் பிரிவினரின் நீதி நிர்வாகப்படி முறை வளர்ச்சியின் அடுத்த அம்சமாக மேன் முறையீட்டு நீதிமன்றம் அமைக்கப்பட்டு அதன் திறப்பு விழா இன்று நடைபெறுகிறது. ஏற்கனவே இயங்கிவரும் மாவட்ட நீதிமன்றுகளில் குடியியல், குற்றவியல் வழக்குகளிலும் தொழில் பிணக்குகளிலும் வழங்கப்படும் தீர்ப்புகளில் திருப்தி அடையாத கட்சிக்காரர்கள் தகுந்த காரணங்களுடன் இம் மேன் முறையீட்டு நீதிமன்றுக்கு மேன் முறையீடு செய்யலாம்.

### மேன்முறையீட்டுசபை

தமிழீழத் தேசியத்தலைவர் வே. பிரபாகரன் அவர்களால் நியமிக்கப்பட்ட நீதியாளர்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மூவர் மேன் முறையீட்டு நீதிமன்றில் ஒன்றாக அமர்ந்து மேன்முறையீட்டுச் சபையாக இயங்குகிறார்கள். இம் மூவரில் ஒருவர் பெண் என்பதும் இங்கு விசேடமாக குறிப்பிடத்தக்கது. இவர்கள் தம் முன் மேன் முறையீடு செய்யப்பட்டுள்ள வழக்கு நடவடிக்கை நிகழ்வுகளின் தொகுப்பையும், தீர்ப்பையும் மறுபரிசீலனை செய்வார்கள். அவசியம் எனக் கருதினால் வழக்குடன் சம்பந்தப்பட்ட எத்தரப்பினரையும் தம் முன் அழைத்து கூடுதல் விளக்கங்களையோ, தகவல்களையோ பெற்றுக் கொள்ளவும், மேலதிகமான சான்றுகளையோ, ஆவணங்களையோ ஒப்படைக்குமாறு கட்டளையிடவும் மேன்முறையீட்டு நீதிமன்று நீதியாளர்களுக்கு அதிகாரம் உண்டு.

மேன் முறையீட்டு நீதிமன்றின் முடிவு எந்த நீதிமன்றின் தீர்ப்புககு எதிராக மேன் முறையீடு செய்யப்பட்டதோ அந்நீதிமன்றினூடாகவே கட்சிக்காரர்களுக்கு அறிவிக்கப்படும்.

மேன்முறையீட்டு நீதிமன்றின்தீர்ப்பே இறுதியானதென்பதுடன் அது அத்தீர்ப்புடன் சம்பந்தப்பட்ட யாவரையும் முழுமையாக கட்டுப்படுத்தும் அதிகாரம் கொண்டதாகவும் அமைகிறது.

### சட்ட அறிஞர்கள்

மேன்முறையீடு செய்யப்படும் வழக்குகள் ஏற்கனவே மாவட்ட நீதிமன்றுகளில் சட்ட அறிஞர்களின் முன்னிலையில் அலசி ஆராயப்பட்டவைகளாகவே இருக்குமென்பதாலும் அதற்கு மேலும் தேவையற்ற வாதப் பிரதிவாதங்கள் இப் போர்க்கால சூழ்நிலையில் தேவையற்றவையாகவும் கால தாமதத்தை ஏற்படுத்தக் கூடியவையாகவும் அமையும் என்பதைக் கவனத்தில் எடுத்து மேன்முறையீட்டு நீதிமன்றின் முன் சட்ட அறிஞர்கள் தெரிபடுவது தவிர்க்கப்பட்டுள்ளது காலப்போக்கில் தமிழீழத்தின் சமூக பொருளாதார விஞ்ஞான வளர்ச்சிக்கும் நீதி நிர்வாகத்துறையின் முன்னேற்றத்திற்கும் ஏற்றவாறு பல மாற்றங்கள் ஏற்படலாம்.

### நடைமுறை

அடுத்ததாக மேன் முறையீடு செய்யும் வழிமுறைகளை இங்கு ஆராய்வோம் ஒரு நீதிமன்றின் தீர்ப்பில் மன நிறைவு ஏற்படாத கட்சிக்காரர் எவரும் மேன் முறையீடு செய்யலாம். தமிழீழ சட்டக் கோவையின் பிரகாரம் மேன் முறையீடு செய்பவர் தீர்ப்பு வழங்கப்பட்ட பதினான்கு நாட்களுக்குள் நீதிமன்றத்தை திருப்திப்படுத்தக் கூடிய காரணிகளை எழுத்தில் சமர்ப்பித்தால் நீதிமன்று மேல் விசாரணைக்கு அனுமதி வழங்கும். அவ்வாறாக அனுமதி வழங்கப்பட்ட திகதியிலிருந்து இருபத்தியொரு நாட்களுக்குள் வழக்கைப் பற்றியும் தனது தரப்பு நியாயத்தைப்பற்றியும் முழுமையான விளக்க உரைகளை ஐந்து பிரதிகளில் எழுத்து மூலம் தயாரித்து மேன் முறையீட்டு விண்ணப்பத்தைச் செய்யலாம். அவ்விதம் விண்ணப்பிக்கும் போது மேன் முறையீட்டு செலவுக்கட்டணமாக ரூபா ஆயிரத்தையும் மன்றில் செலுத்த வேண்டும்.

இம் மேன் முறையீட்டு வழிமுறைகள் சகலகுடியியல், குற்றவியல் வழக்குகளுக்கும்தொழில் பிணக்குச் சம்பந்தமான பிணக்குகளுக்கும் பொருத்தமுடையதாகும்.

### இறுதி முடிவு

மேன்முறையீட்டுச் சபையினர் விசாரணைகளை தாம் பொருத்தமெனக் கருதும் முறையில் சுதந்திரமாகவும் தலையீடுகள் எதுவுமின்றியும் மேற்கொள்வர். அதுவுமல்லாமல் தமது குழுவின் விசாரணை முடிவை ஆகக் கூடியது ஆறுமாத காலத்துக்குள் முடித்து சம்பந்தப்பட்ட நீதிமன்றுக்கு அனுப்பவேண்டும். முடிவை அந்த மன்றுதான் கட்சிக்காரர்களுக்கு அறிவிக்கும். இம் முடிவு இறுதியானதும் மாற்ற முடியாததுமாகும்.

தற்போது தமிழீழ மேன் முறையீட்டு நீதிமன்றின் முன்னர் யாழ் மாவட்டத்தில் இயங்கும் சுன்னாகம், சாவகச்சேரி, பருத்தித்துறை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்ட நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்புகளில் பதினாலு வழக்குத் தீர்ப்புகளுக்கு எதிராக மேன் முறையீடு செய்யப்பட்டுள்ளது இவற்றில் பன்னிரண்டு தீர்ப்புகள் குற்றவியல் சம்பந்தமானவையாகவும் ஏனைய இரண்டும் குடியியல் சார்ந்த காணி வழக்குகளும் ஆகும்.

### கருணை மனு

மக்கள் தம் குறைகளை மேன் முறையீடு செய்யும் உரிமை மேன்முறையீட்டு நீதிமன்று அமைப்புடன் நிறுத்தப்படவில்லை தமிழீழ சட்டக் கோவையில்தமிழீழத்தேசியத் தலைவருக்கு மேன் முறையீடு செய்யும்வாய்ப்பும் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எந்த ஒரு குற்றச் சாட்டிலும் ரூபா 100,000/- க்கு மேல் அபராதம் விதிக்கப்பட்ட அல்லது ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள குற்றவாளிகள் எவரும் தமது தவறுக்கு மன்னிப்புக்கோரி தண்டனையை குறைக்குமாறு தமிழீழத் தேசியத்தலைவருக்கு குறித்த நீதிமன்றில் கருணை மனு சமர்ப்பிக்கலாம். அதற்கான தேசியத் தலைவரின் கட்டளை நீதிமன்று ஊடாக பகிரங்கப் படுத்தப்படும். இதுவுமல்லாமல் மாவீரர் தினத்தை முன்னிட்டு வருடந்தோறும் தமிழீழத் தேசியத்தலைவர் குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்ட தண்டனைகளைக் குறைக்கவோ மன்னிப்பு வழங்கவோ ஒரு பிரகடனத்தை வழங்குவார். கருணை மனு கோரும் உரிமை பாதிப்புக்கு உள்ளாகியுள்ளேன் என்று கருதும் நபரினால்மாத்திரமேசெய்யப்படவேண்டும். அவருக்காக இன்னொருவர் செய்வது தவிர்க்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்டவர்களின் துன்பத்தில் மற்றவர்கள் இலாபம் அடைவதைத் தடுப்பதற்காகத்தான் இந்நடைமுறையாகும்.

ச. தியாகராசா

# சட்ட அமைச்சர் கிருஷ்ணசாமி பதவி நீக்கப்பட வேண்டும்

## கருணாநிதி கோரிக்கை

(சென்னை)

தமிழ்நாட்டில் எத்தனையோ சட்ட அமைச்சர்கள் இருந்து தான் இருக்கின்றார்கள் ஆனால் எந்த ஆட்சியிலும் எவரும் இன்றுள்ளவரைப் போல பொத்தல் கலமாக இருந்ததில்லை. சட்டப் பிரச்சினைகளில் போதிய அளவு ஞானமுள்ளவர்களாகவே விளங்கினர் என்று திமுக தலைவர் மு, கருணாநிதி கூறியுள்ளார்,

முரசொலி பத்திரிகையில் கருணாநிதி எழுதிய கட்டுரை ஒன்றில் மேலும் [illegible] வோம் என மிரட்டுவது, ஜனநாயகத்தின் குரல்வளையை நெரித்து நீதித்துறை என்கின்ற இருதயத்தையே நசுக்குவது என்பதை எல்லாக் கட்சிகளும் சுட்டிக்காட்டி கண்டித்திருக்கும் போது சட்ட அமைச்சருக்கு மட்டும் அதை சிந்தித்துப்பார்க்க நேரமின்றி வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் செயல்களுக்கு ஊக்கம் அளிக்கக் களத்தில் குதித்து விட்டார் என்றும் தெரிவித்துள்ளார்.

# தமிழக அரசுக்கு எதிரான ஊழல் பட்டியல் சமர்ப்பிப்பு

(சென்னை)

படி. அதில் கேட்டுக்கொள்ளப் [illegible]

# இயக்க அரவணைப்புக்கு தொண்டர்படை அமையும்

## வை கோ தெரிவிப்பு

(சென்னை)

நமது இயக்கத்திற்கு அரவணைப்பாகவும் இயற்கையின் சீற்றங்களால் அல்லல் படும் பொதுமக்களைக் காப்பதற்காகவும் மாவட்டம்தோறும் தொண்டர்படை அமைக்கப்படும் இவ்வாறு தி மு க. (கோ) அணியின் பொதுச் செயலாளர் வை, கோபால்சாமி தஞ்சாவூரில் தெரிவித்தார்.

தஞ்சை மாவட்ட அலுவலக திறப்பு விழாவில் கலந்து கொண்டுபேசியஅவர் மேலும் கூறுகையில் 83-ம் ஆண்டில் திமுகவிற்கென தொண்டர்படை அமைக்கப்பட்டு அரசின் அடக்குமுறைகளை மீறி கட்சிக் கட்டுப்பாட்டையும், கருணாநிதி உள்ளிட்ட தலைவர்களையும்காக்கதொண்டர்படை செம்மையாக செயற்பட்டது கட்சிகளாகவும், கட்சியின் நன்மைக்காகவும் பாடுபட்ட தொண்டர்களை கருணாநிதி பதவியேற்றதும் உதாசீனப்படுத்த துணிந்து விட்டார் எனவும் குறிப்பிட்டார்

திறிதிகளான காமினி ஜெயசூரியா, டாக்டர் குணதாச அமரசேகரா உட்பட பௌத்த பிக்குகளும் அடங்குகின்றனர்.

சிங்கள எதிர்க்கட்சியினர் குறிப்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி வெளிப்படுத்தியுள்ள இக்கருத்தானது, இனப்பிரச்சினை தொடர்பான விடயத்தில் இவர்கள் முன்னேற்றகரமான திட்டம் எதையும் கொண்டிருக்கவில்லை என்பது மட்டுமல்ல, இன்னும் அவர்கள் மாற்றம் அடையவில்லை என்பதைக் காட்டுபவையாகவுமே உள்ளன. மறுவழமாக, இனவாதத்தில் ஏனையவர்களுக்கு நாங்கள் சளைத்தவர்கள் அல்ல. ஒருபடி மேலானவர்கள் என்பதைக் காட்டும் முயற்சியாகும்.

இவர்களின் இவ்வாறான நிலைப்பாடே இனங்களில் இன்று இரத்த ஆறு ஓடுவதற்குக் காரணமாகும். அரசியல் கட்சிகள் நடத்திய இவ்வாறான இனவாதப் போட்டியானது இலங்கையின் அமைதியைக் குலைத்தது; பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பலி எடுத்தது; பல ஆயிரம் கோடி ரூபா இழப்பை உண்டு பண்ணியது.

ஆயினும் சிங்கள அரசியல்வாதிகளில் எவரும் - அரசாங்க தரப்பினரும் சரி, எதிர்த்தரப்பினரும் சரி - இன்னும் திருந்தவில்லை. சிங்கள அரசியல்வாதிகளின் அரசியல் மூலதனமாக அன்றும் இன்றும் இனவாதமே உள்ளது. இதற்கு அவர்கள் எந்த அளவில் பௌத்த சிங்களபேரினவாதத்தில் ஊறிப் போயுள்ளார்கள் என்பதை விட அவர்களுக்கு ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு இதைவிட மார்க்கம் எதுவும் தெரியவில்லை என்பதே உண்மை நிலையாகும்.

இந்நிலையில், இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான சமாதான தீர்வு என்பது இப்போதைக்குச் சாத்தியமாகப் போவதில்லை. சிங்கள அரசியல் கட்சிகள் இனப்பிரச்சினை தீர்வு பற்றியும், சமாதானம் பற்றியும் பேசுவது எல்லாம் வெறும் ஏமாற்று வேலைகளே. சமாதானம் குறித்து எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கும் இவர்கள் உதவப் போவதில்லை. ஒருவர் அடி என்றால், மற்றவர் கொல் என்னும் நிலையிலேயே சிங்கள அரசியல் கட்சிகள் தமிழர் விவகாரத்தில் உள்ளன என்பதே யதார்த்த நிலையாகும்.

---

கருணாநிதி எழுதிய கட்டுரையொன்றில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது;

நீதிபதிகளைக் கேவலப்படுத்தி சுவரொட்டிகள் ஒட்டி நீதிமன்ற சுவர்களையேதலை குனிய வைத்துவிட்டார்கள். இந்த தீய செயலுக்காக சட்ட அமைச்சர் கே. ஏ. கிருஷ்ணசாமியை பதவி நீக்கம் செய்ய வேண்டும்.

அரசாங்கம் ஒரு குரங்கைப் பிடித்து வந்து இது தான் பிள்ளையார் என்று சொன்னாலோ அல்லது கறுப்பைக் காட்டி வெள்ளை என்று சொன்னாலோ அதனை உடனே ஏற்றுக் கொண்டு ''ஆமாம்! ஆமாம்!'' என்று நீதிபதிகள் உடுக்கு அடிக்காது விட்டால் ''கஞ்சா'' வழக்கில் அவரது உற்றார் உறவினரைக் கைது செய்

---

## பிரதமருக்கு பாராட்டு

(டில்லி)

பி. வி. நரசிம்மராவ் பிரதமராக பதவியேற்று ஆயிரம் நாட்கள் பூர்த்தி செய்யப்பட்டதை தொடர்ந்து காங்கிரஸ் கட்சியின் நாடாளு மன்றக் குழுவும், காங்கிரஸ் கட்சியின் செயற்குழுவும் அவருக்குப் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்டுள்ளன.

## பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு

பாகிஸ்தான் கிழக்கு இஸ்லாமாபாத் நகரத்தில் பயணிகள் பஸ் ஒன்றில் சக்தி வாய்ந்த குண்டு வெடித்ததில் ஆறு பேர் உயிர் இழந்தனர். நேற்று முன் தினம் இடம் பெற்ற இக் குண்டு வெடிப்பின் போது இருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர் எனவும், ஏனையோர் மருத்துவ மனையில் உயிரிழந்தனர் எனவும் கூறப்படுகிறது.

---

(சென்னை)

தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அமைச்சரவை சகாக்கள் மற்றும் ஆளும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்திற்கு எதிரான ஊழல்புகார்கள் அடங்கியமனு ஒன்றை தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. வாழப்பாடி இராமமூர்த்தி தலைமையிலான ஒரு குழு சென்னையில் ஆளுநரிடம் நேற்று முன்தினம் சமர்ப்பித்துள்ளது.

முதலமைச்சர் தனது அதிகாரத்தை தவறாகப்பயன்படுத்தி சொத்து சேர்த்துள்ளதாகவும் அவரும் அவரது அமைச்சரவை சகாக்களும் சட்டத்திற்கு புறம்பான செயல்களில் ஈடுபட்டுள்ளதாகவும் அம்மனுவில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை தமிழகத்தில் விடுதலைப்புலிகளின் நடவடிக்கை அதிகரித்துள்ளன என்றும் ஆளுநர் உடனடியாகத் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அம்மனுவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது

நிலக்கரி ஊழல், ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, ஸ்ரார் மருத்துவ பயிற்சி நிலையங்கள் பாமாயில் இறக்குமதி, வீராணன் திட்டம் போன்றவை உட்பட 38 ஊழல் புகார்கள் பட்டியல் இடப்பட்டுள்ளன.

இப்புகார் மனுமற்றும் ஆவணங்கள் ஆகியவற்றின் பிரதிகள் அடங்கிய தொகுப்பு நேற்று முன்தினம் சென்னையில் செய்தியாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. இந்த புகார் மனுவை ஆளுநர் குடியரசு தலைவர் டாக்டர் சங்கர் தயாள்சர்மா பிரதம மந்திரி திரு. பி. வி. நரசிம்மராவ் மற்றும் மத்திய உள்துறை அமைச்சகம் ஆகியவற்றிற்கும் அனுப்பிவைத்து விசாரணை கமிசன் சட்டத்தின் கீழ் ஒரு விசாரணை கமிசனை அமைக்குமாறு பரிந்துரை செய்யும்படி அதில் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது.

முதலமைச்சரும் அவரது அமைச்சரவை சகாக்களும் சட்டவிரோதமாக சொத்து சேர்த்திருப்பதாகவும் எனவே சட்டத்தின்படி தண்டிக்க வேண்டும் என்றும் மாநிலத்தின் அரசியல் சாசனத் தலைவர் என்ற முறையில் ஆளுநருக்கு வேண்டுகோள் விடுக்கப் பட்டுள்ளது.

இதற்கு முன்னதாக சென்னை நந்தனம் பகுதியில் இருந்து ஆளுநர் மாளிகை வரை இக்குழுவினர் ஊர்வலமாக சென்றனர். இந்தக்குழுவில் திரு வாழப்பாடி இராமமூர்த்தியை தவிர சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், எம். ஜி. ஆர். அண்ணா திராவிட முன்னேற்ற கழக பொதுச் செயலாளர் திரு. எஸ். திருநாவுக்கரசு தமிழ் நாடு முஸ்லிம் லீக் தலைவர் திரு, செய்யதுத்தம்பி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்து நீக்கப்பட்ட முன்னாள் அமைச்சர்கள் திரு. ராஜாராம், திரு. வி. விஸ்வநாதன். கிறிஸ்தவ முன்னேற்றக் கழக தலைவர் திரு. யோசப் பெர்ணாண்டஸ். கிறிஸ்தவ ஜனநாயக கட்சித்தலைவர் திரு. தம்பா ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

## பயிற்சி விமானம் விழுந்து நொருங்கியது

(சென்னை)

இந்திய விமானப்படையின் பயிற்சிவிமானமொன்று ஒசூர் அருகில் விழுந்து நொருங்கியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் அதிலிருந்த இருவரும் தப்பியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

---

கொண்டுபேசிய அவர் மேலும் டார்

## ஜெயலலிதா - சசிகலா உறவைப் பிரிக்க சதி

### -நடராசன் கூறுகிறார்

முதல்வர் ஜெயலலிதாவின் உயிர்த்தோழியான சசிகலாவை அவரிடமிருந்து பிரிக்க ஜனதாக் கட்சித் தலைவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான டாக்டர் சுப்பிரமணிய சுவாமி சதி செய்து வருவதாக சசிகலாவின் கணவரும், பத்திரிகையாளருமான எம். நடராசன் கூறியுள்ளார்.

சென்னையில் அவர் நிருபர்களிடம் பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது என் மீது வீண் பழி சுமத்தும் பணியில் சுப்பிரமணியசுவாமி ஈடுபட்டு இருக்கிறார். இதற்காக அவர் பொய்யான குற்றச்சாட்டுக்களை சுமத்தி என்மீது நடவடிக்கை எடுக்கும்படி முதல்வர் ஜெயலலிதாவை நிர்ப்பந்தித்து வருகிறார்

என்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டால் என்மனைவி சசிகலா முதல்வர்ஜெயலலிதாவின் வீட்டில் இருக்கமுடியாதநிலை தோன்றும். ஜெயலலிதாவிடமிருந்து சசிகலாவைப் பிரித்துவிட்டால் ஜெயலலிதாவை தனிமைப்படுத்தி வீழ்த்திவிடலாம் என்று சுப்பிரமணிய சுவாமி நினைக்கிறார் எனத் தெரிவித்தார்.

நடராசனுடன் தனக்கு எந்தவித உறவும் கிடையாது என்று முதல்வர் ஜெயலலிதா கூறியதைப் பற்றி நிருபர்கள் கேட்டபோது நடராசன் உண்டென்றால் அது உண்டு இல்லையென்றால் அதுஇல்லை அதற்குமேல்எதுவுமில்லை என்று சிரிப்புடன் பதிலளித்தார்.

## பாலத்தீனியர் பாதுகாப்பு மேலும்உறுதிப்படுத்தப்படும்

### -இஸ்ரேல் பிரதமர் தெரிவிப்பு

(ரோம்)

ஏப்ரோன் மசூதிப் படுகொலையை அடுத்து இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க மிகவும் ஆர்வம் கொண்டுள்ள இஸ்ரேல் பிரதமர் யிட்சாக் ராபின் இஸ்ரேலின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட பகுதியில், பாலத்தீனியர்களின் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேலும் பலப்படுத்தப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இரு வலதுசாரி தீவிரவாத அமைப்புகளுக்கு தடை விதிக்கப்பட்டிருப்பதை சுட்டிக் காட்டிய அவர், இது தொடர்பாக சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருப்பதாகவும், சட்டப்படியும், தார்மீக கடப்பாட்டின் படியும் சகலரையும் பாதுகாப்பது தமது பொறுப்பேயாகும் எனவும் ரோம் நகரில் செய்தியாளர் மத்தியில் பேசிய அவர் குறிப்பிட்டார்.

வாஷிங்டனிலிருந்து தாயகம் திரும்பும் வழியில் அவர் ரோம் நகரில் செய்தியாளர்களை சந்தித்தது குறிப்பிடத்தக்கது.

நூலகம் யாழ்ப்பாணம்

# கப்பல் பயணிகள்மீது கெடுபிடி கண்டித்து தீர்மானம் அனுப்ப முடிவு

(யாழ்ப்பாணம்)

கப்பல் பயணிகள் மீது சோதனை என்ற பெயரில் சிறிலங்காப் படையினர் நடாத்திவரும் கெடுபிடி நடவடிக்கைகளைக் கண்டித்து பாதுகாப்பு அமைச்சுக்கு மகஜர் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

திருகோணமலைக்கும் பருத்தித்துறைக்குமிடையில் நடைபெற்றுவரும் பயணிகள் கப்பல் மூலம் பயணம் செய்யும் பயணிகள் மீது நீண்ட நாட்களாக சோதனை நடவடிக்கை என்ற பெயரில் பல கெடுபிடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. காங்கேசன்துறையிலும் திருகோணமலையிலும் இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன்போது பயணிகளிடமிருந்து பல பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டு வருகிறது.

இவ்வாறான படையினரின் நடவடிக்கைகளைக் கண்டித்து மகஜர் அனுப்பும் நடவடிக்கையின் முன்னேற்பாடாக இன்று கண்டனக் கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் மாவட்டத் தலைமை அலுவலகத்தில் நடைபெற இருக்கும் இக் கண்டனக் கூட்டத்தின் இறுதியில் கண்டன மகஜர் ஒன்று தயாரிக்கப்படும். இக் கண்டன மகஜரை யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் எடுத்துச்சென்று பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகளிடம் சமர்ப்பிக்க இருக்கிறார் (க)

## ஒய்வூதிய நடவடிக்கைகள் அரச அதிபர் பொறுப்பில்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் நான்கு மாவட்டங்களில் ஒய்வூதியம் சம்பந்தமான நடவடிக்கைகளை அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபர்களே கவனிக்க வேண்டும் என்று வடக்கு - கிழக்கு மாகாண சபை பணித்துள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள ஒய்வூதியம் சம்பந்தமான சகல நடவடிக்கைகளையும் கவனித்து ஒய்வூதியம் வழங்குவதில் உள்ள தாமதத்தைப் போக்கவேண்டுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது

வடக்கு - கிழக்கில் உள்ள ஏனைய மாவட்டங்களில் ஒய்வூதிய செயற்பாடுகளை மாகாணசபை கவனிக்கும் என மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (தி,பா)

## கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் 17 வெற்றிடங்களுக்கு 10700 பேர் விண்ணப்பம்

வடக்கு - கிழக்கு பகுதிகளில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு பத்தாயிரத்து எழுநூறு பேர் விண்ணப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பதினேழு வெற்றிடங்கள் உள்ள இப் பதவிக்கு 10,700 பேர் விண்ணப்பித்துள்ளது இதுவே முதல் தடவையென வடகிழக்கு மாகாணசபையின் செய்திக் குறிப்பு போன்ற தகவல் வெளியிட்டுள்ளது.

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கான பரீட்சைக்கு "தயார்ப்படுத்தும் வேலைகளுக்கு" பகுப்பாய்வு செய்யப்பட்டு வருகிறதாகவும் விரைவில் பரீட்சைத் திணைக்களம் பரீட்சை நடாத்தும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (05, 07)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

18.03.1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்;- 1320

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:-
27-7487, 27-9489, 24-9856, 22-7271, 26-2414, 27-9788, 42-1484

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்-:
26-1729, 26-4393, 26-3321, 22-3287, 24-4207, 26-3690, 26-1349, 26-2984, 41-9696, 26-7039, 26 3177, 24-5416, 41-9166, 40-4760, 42-3239, 26-1741, 26-1253, 42-999, 26-3662, 41-5015, 26-2108, 27-5449, 27-7711, 41-2979, 26 7117, 26-3073, 26-362.

## ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும்

(தொல்புரம்)

சித்தன்கேணி வட்டுக்கோட்டை பிரதான வீதியில் உள்ள பாதையோரத்தில் ஒரு தொகைப்பணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி மாணவர்களால் மேற்படி தொகைப்பணம் கண்டெடுக்கப்பட்டு அக் கல்லூரி அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. குறித்த தொகைப் பணத்தினை தவறவிட்டவர்கள் தகுந்த ஆதாரங்களைக் காட்டி பாடசாலை நேரத்தில் அதிபரிடம் பெற்றுக் கொள்ளுமாறு கல்லூரியின் அதிபர் திரு. ந. பரமசிவம் கேட்டுள்ளார், (41)

## மெய்வல்லுநர் போட்டி

(தொல்புரம்)

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2:00 மணியளவில் வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தர் வித்தியாலய முன்றலில் அமைந்த மைதானத்தில் கல்லூரி அதிபர் ந. பரமசிவம் தலைமையில் இடம்பெறவுள்ளன. இந் நிகழ்வின் ஊர்காவற்றுறைக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா. சுந்தரலிங்கம் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (41)

## வீரவணக்க கூட்டம்

(தொல்புரம்)

மண்மீட்புப் போரில் வீரச்சாவெய்திய வேங்கைகளை நினைவு கூரும் முகமாக தமிழீழ விடுதலைப்புலிகளால் மூளாயில் வீரவணக்கக் கூட்டம் நடாத்தப்படவுள்ளது

மூளாய் பிள்ளையார் கோவிலடிக்கு அருகாமையில் அமைந்துள்ள மாவீரர் பிரசாத் கலையரங்கில் இன்று இரவு 7 30 மணியளவில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் 9, 10, 11, 12, 1, 2, 3 ஆம் மாதங்களில் வீரச்சாவெய்திய மேற்படி பிரதேசத்தினைச் சேர்ந்த வேங்கைகளை நினைவுகூர்ந்து வீரவணக்கக் கூட்டம் இடம்பெறவுள்ளது. மேலும் இந் நிகழ்வின்போது விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர்கள் பலர் உரையாற்றவுள்ளதுடன், கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

## தாச்சிப்போட்டி

கைதடி - நாவற்குழி, மறவன்புலோ கிராமிய பாசறை நிகழ்வின் இன்றைய விளையாட்டு நிகழ்வாக கண்காட்சி தாச்சிப் போட்டி நடைபெறவுள்ளது. இதில் கைதடி நாவற்குழி விஸ்ணு விளையாட்டுக் கழக அணியும் கைதடி வளர்மதி விளையாட்டுக் கழக அணியும் பங்கு கொள்ளவிருக்கின்றன. அத்துடன் கரப்பந்தாட்ட நிகழ்வும் இடம் பெறவுள்ளது.

## பொதுக் கூட்டம்

யாழ் மாவட்ட உதைபந்தாட்ட சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிறு முற்பகல் 9:30 மணிக்கு கோண்டாவில் அரசியல் துறை யாழ் மாவட்டச்

# பல்கலைக்கழக அனுமதிக்கு உயர்தரப்பரீட்சை பொருத்தமானதா?

## ஆராய தனிநபர் ஆணைக்குழு

(கொழும்பு)

இலங்கைப் பல்கலைக் கழகங்களில் மாணவர்களை அனுமதிப்பதற்குரிய தகைமையாக கல்விப் பொதுதராதரப் பரீட்சைப் பெறுபேறுகளைத் தொடர்ந்தும் ஏற்றுக்கொள்ளலாமா என்பதுகுறித்து அரசு ஆலோசித்து வருகின்றது.

மேற்படி விடயம் குறித்து ஆலோசிப்பதற்காகத் தனிநபர் ஆணைக்குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது; இத் தனிநபர் ஆணைக்குழு பல்கலை அனுமதிக்காக க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளைத் தொடர்ந்தும் ஏற்றுக்கொள்வதா என்றும் இப்பரீட்சை பொருத்தப்பாடு அற்றதாகக் காணப்படும் பட்சத்தில் புதியபரீட்சை ஒன்றை நடாத்தும் சாத்தியங்கள் குறித்தும் இக்குழு ஆராய்ந்து வருகின்றது.

இக்குழு தனது ஆராய்வின் இறுதியில் இவ்விடயம்குறித்து அறிக்கை ஒன்றைத் தயாரித்து அரசிடம் கையளிக்கும் என்றும் கூறப்படுகிறது. இதன் பின்னர் இக்குழுவின் சிபார்சுகளுக்கமைய பல்கலைக்கழக அனுமதிமுறை மாற்றியமைக்கப்படும் என்றும் தெரியவருகிறது. (க)

## திறந்த பல்கலைக்கழக டிப்ளோமா கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

திறந்த பல்கலைக்கழக யாழ் பிராந்திய நிலையத்தில் தொழில் நுட்பவியல் டிப்ளோமா கற்கை நெறியின் கல்வி ஆண்டு 1990|91-இல் விண்ணப்பித்தவர்கள் அனைவரையும் எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன் யாழ். பிராந்திய நிலைய அலுவலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு அதன் இயக்குநர் திரு. ச. ஆ. ஞானேந்திரன் கேட்டுள்ளார்,

## பேராசிரியர் துரைராசாவுக்கு மாபெரும் பிரிவுபசாரவிழா

யாழ். பல்கலைக் கழக அனைத்து ஊழியர்களும் ஒன்றிணைந்து எதிர்வரும் 22 ஆம் திகதி பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா அவர்களுக்கு மாபெரும் பிரிவுபசார விழா ஒன்றினை சிறப்புற கொண்டாடத் தீர்மானித்துள்ளனர்.

அன்றைய தினம் பிற்பகல் மூன்று மணிக்கு மங்கள வாத்தியங்கள் இசைக்க பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளுடனான ஊர்வலமும், பாராட்டுக் கூட்டமும் கௌரவிப்பும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

## கூட்டுறவுச் சங்க பரிசோதகர் பரீட்சை நிலையம்

கூட்டுறவுச் சங்க பரிசோதகர் சேவையின் 2 ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை இன்று நடைபெறும். மேற்படி பரீட்சையின் பரீட்சை மண்டபமான யா/நல்லூர் சாதனா ம. வி. மண்டபம் இல 02 யா/கனகரத்தினம் ம. ம. வி. யில் அமைக்கப்பட்டுள்ளது என்பதையும் யா/நல்லூர் சாதனா ம. வி. மண்டப இல. 02 பரீட்சார்த்திகளை யா/கனகரத்தினம் ம. ம. வி. மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுமாறும் யாழ். கல்விப்பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி அறிவித்துள்ளார்.

## உலகக்

துங்கின் புரட்சிப்புகழ் மண்டபத்தில் இடம் பிடிக்க வேண்டியவரின் சிறிலங்கா இராணுவத்தின் முதுகெலும்பை பூநகரிச் சமரில் புலிகள் நொருக்கியது, இதற்கு முந்திய அவர்களது பல வெற்றிகரமான தாக்குதல்களின் வரிசையில் இடம்பெறுகிறது

அதிகாலையில் பூநகரிமீது தொடுக்கப்பட்ட தாக்குதல்கள் பிரபாகரனின் யுத்த தந்திரத்தை வெளிப்படுத்துகின்றது எனில் அதன் நேரத் தேர்வு, அரசியல் நுட்பத்தை பிரதிபலித்தது சிறிலங்கா இராணுவம் அண்மையில் அடுத்தடுத்து தோல்விகளை சந்தித்துள்ளது.

இப்போது சிறிலங்காப் பாதுகாப்புப்படை சரிந்து செல்கின்றது. சிறிலங்கா இராணுவத்திடம் இப்போது புலிகள் குறித்த கிலி பிடித்துள்ளது: பூநகரியில் புலிகள் ஏற்படுத்திய அழிவு பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டப் போவதாக கூப்பாடு அறிவித்த ஜனாதிபதி விஜேதுங்க

## பரிசளிப்பு விழா

(மல்லாகம்)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு வைபவம் இன்று மாலை 5.00 மணிக்கு இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். பரிசளிப்பு பேருரையை பிரதம விருந்தினராக கலந்து கொள்ளும் கல்லூரியின் இளைப்பாறிய அதிபர் திரு நா. கந்தசாமி நிகழ்த்துவார். பரிசில்களை திருமதி வி. கந்தசாமி வழங்குவார். (09)

## தியாகச்சுடர்

அஞ்சலி செலுத்தப்படுகின்றன.

இந்த நாட்களில் சிரமதானங்கள் மற்றும் வேறு நடவடிக்கைகள் மேற்கொள்

## மலேரியா கருத்தரங்கு

(தொல்புரம்)

வலிமேற்கு பிரதேச செயலர் பிரிவில் மலேரியா தடுப்பு வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. மேற்படி நிகழ்வினையொட்டி இன்று சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் தொல்புரம் அமெரிக்க மிசன் தமிழ் கலவன் பாடசாலை மண்டபத்தில் மலேரியா நோய் தடுப்பு சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது தொல்புரம் மத்தி, மேற்கு, கிழக்கு கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் அனைவரையும் இக் கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (41)

# இதய அஞ்சலி

அச்சுவேலி மத்திய கல்லூரியின்
(யா- அச்சுவேலி மகாவித்தியாலயம்)

## முன்னைநாள் அதிபர்
## உயர்திரு. எஸ். எஸ். துரைசிங்கம்

அவர்களின் ஆத்ம சாந்திக்காக

அச்சுவேலிச் சமூகம் கண்ணீரால் அஞ்சலிக்கின்றது



மண்ணில்
பிறப்பு
23 - 01 - 1927

மண்ணுடன்
கலப்பு
19 - 03 - 1994

அதிபர், ஆசிரியர், மாணவர், ஊழியர்
(7799) மா. அ. சபை, மா. அ. சங்கம், பழைய மாணவர் சங்கம்

---

மணிக்கு கோண்டாவில் அரசியல் துறை யாழ் மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது இதில் சகல வலய உதைபந்தாட்டச் சங்கங்களிலிருந்தும் அங்கீகரிக்கப்பட்ட மூன்று பிரதிநிதிகளை தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

போவதாக கூட்டாக அறிவித்த ஜனாதிபதி விஜேதுங்காவிற்கும் இராணுவத் தளபதி (முன்னாள்) ஜெரி வைத் தியரட்ணவுக்கும் முகத்தில் கரி பூசியதற்கு ஒப்பானது என இந்திய இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் அசோக் மேத்தா 'சண்டே' சஞ்சிகையில் எழுதியுள்ளார்.

நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (தி, பா)

### மலேரியா

மிய மட்டங்களில் சிரமதானப் பணிகளையும் செய்ய வேண்டும் எனவும் சம்பந்தப்பட்ட குழுவினர் கேட்டுள்ளனர். (தி பா)

கப்படுகின்றனர். (41)

### கோமாரி

ஒவ்வொரு கப்பலிலும் தபாற்பொதிகள் எடுத்துவரப்படுமென தெரிவிக்கப்பட்ட போதிலும் கொழும்பில் இருந்து வந்த இக்கப்பலில் தபால்கள் எடுத்துவரப்படவில்லையென தெரிய வருகிறது- (யோ)

---

# மரண அறிவித்தல்கள்

## குருசுமுத்து திரேசா

பலாலியைப் பிறப்பிடமாகவும், 4/3, 3ஆம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குருசுமுத்து திரேசா (அம்மாச்சி) 18-03-94 அன்று காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற குருசுமுத்துவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அன்ரனி றோமானின் அன்புச் சகோதரியும் ஆவார். அன்னாரின் இறுதிச்சடங்கு 19-3-94 மாலை 4 மணிக்கு யாழ். மரியன்னை தேவாலயத்தில் திருப்பலியின் பின் கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

4/3, 3-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். — தகவல்: திருமதி லிற்னா யோகரட்ணம் (மருமகள்)

(7800)

## ஆறுமுகம் மகேஸ்வரி

மண்கும்பான் 4-ம் வட்டாரத்தை பிறப்பிடமாக கொண்டவரும் இருபாலை கிழக்கை வசிப்பிடமாக கொண்டவரும், காலஞ்சென்ற சண்முகம் - அன்னம் அவர்களின் அன்பு மகளும் லீலாவதி, காலஞ்சென்ற சந்திர பூபதி, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அருமைத் தாயாரும், மாணிக்கவாசகர், திருநாவுக்கரசு, பரமேஸ்வரி, நாகேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், ராசு விஜயாவின் அன்பு மாமியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று இருபாலை கிழக்கு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

தகவல்
பாலசுப்பிரமணியம்
(மகன்)

(7801)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 81ஆம் இலக்கத்தில் உள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

# வேலை வாய்ப்பு

## கணக்காய்வு உத்தியோகத்தர்
## (ஆண்)

தமிழீழ அரசியற்துறைக்கு மேற்படி பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### தகைமைகள்

1) க. பொ. த (உயர்தரம்) பரீட்சையில் கணக்கியல் உட்பட ஆகக் குறைந்தது மூன்று வர்த்தக பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்

2) கணக்கியலில் உயர் தேசிய டிப்ளோமா (Diploma In Accountancy) சான்றிதழ் அல்லது சீ. ஐ. எம். ஏ (CIMA) பகுதி 1-3 சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

(1 இலும் 2 இலும் குறிப்பிடப்பட்டவர்கள் பிரபல தனியார் / அரச நிறுவனங்களில் 3 வருட அனுபவம் பெற்றவர்களாக இருத்தல்வேண்டும்)

3) அரசாங்க / தனியார் சேவையிலிருந்து இளைப்பாறியவர்கள் ஆகக்குறைந்தது பத்து வருடங்கள் கணக்காய்வு வேலை செய்த அனுபவம் இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட தகைமைகள் உள்ளவர்கள் 25 03 94 ஆம் திகதிக்குமுன்னர் தமிழீழ அரசியற்துறை, தமிழீழ விடுதலைப் புலிகள், கச்சேரி கிழக்கு, கண்டுகுளி, தமிழீழம் என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்

விண்ணப்பங்களை அனுப்பும்போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கணக்காய்வு உத்தியோகத்தர்" என்று எழுதப்படல் வேண்டும்.

அரசியற்துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.

(சி-8872)